பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 02 செவ்வாய்க்கிழமை (15.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daiiy கதிர் :109

## இந்தியாவோடு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து புலிகளின் விமானத்தளத்தை அழியுங்கள்!

### அரசுக்கு ஹெல உறுமய அவசர வேண்டுகோள்

கொழும்பு,மார்ச்15

தமிழீழ விடுதலைப் புலிகள் பெரும் யுத்தமொன்றுக்குத் தயாராகிவிட்டனர். அவர்களிடம் இப்போது விமானப்படையும் இருப்பது பெரும் ஆபத்தாகும். இவ்வாறான நிலையில் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை உடனடியாகச் செய்து புலிகளின் விமானத்தளங்களை அழிக்க ஜனாதிபதி உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய நேற்று அவசர வேண்டுகோளொன்றைவிடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வண. எல்லாவல மேதானந்ததேரர் தலைமையிலான தேரர்கள் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினர். அந்தச் செய்தியாளர் மாநாட்டிலேயே இந்த அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அங்கு வண. எல்லாவல மேதானந்த தேரர் மேலும் கூறியதாவது:-

உலகில் இல்லாத அதிகாரங்களையெல்லாம் இந்த அரசு பிரபாகரனுக்கு வழ்ங்கியிருக்கிறது. ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அரசு தனது அதிகாரத்தை நிலைநாட்டியிருக்கவேண்டும். ஆனால், அந்த அதிகாரத்தைப் பிரபாகரனுக்கு வழங்கிவிட்டு அரசு விழிபிதுங்கி நிற்கின்றது. ஆழிப்பேரலையின் பின்னர் விடுதலைப் புலிகள் மேலும் பலமடைந்திருக்கின்றனர்.

ஆழிப்பேரலைக்கு முன்னர் புலிகளிடம் விமான ஓடுபாதைத்தளம் மட்டுமே இருந்தது. இப்போது விமானமும் இருக்கிறது. இது தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகும். பத்தாயிரம் அடி உயரத்தில் நீண்டதூரம் வரை செல்லக்கூடிய விமானங்களை வைத்துக்கொண்டு

(16ஆம் பக்கம் பார்க்க)

### நீர்வேலிச்சம்பவம்: இராணுவச்சிப்பாய் அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம்,மார்ச்15

நீர்வேலியில் கடந்த 10 ஆம் திகதி வயோதிப மாது ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்ற சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட சிப்பாய் இருசாட்சியாளர்களால் அடையாளம் காட்டப்பட்டார்.

அச்சுவேலி இராணுவ முகாமைச் சேர்ந்த முத்துலாகே விமலரத்ன என்ற சிப்பாய் யாழ். நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பில் நேற்று நிறுத்தப்பட்டார்.

பாதிக்கப்பட்ட பெண்ணும் மற்றும் ஒருவரும் சிப்பாயை அடையாளம் காட்டினர். இதையடுத்து பிரஸ்தாப சிப்பாயை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டார். (எ-3)

# ஐ.தே.கவைப் பிளந்து தம் பக்கம் ஆள்சேர்க்க ஜனாதிபதி திட்டம்!

## முன்னாள் அமைச்சர்கள் இருவரோடு கடந்தவார இறுதியில் இரகசியப் பேச்சு

கொழும்பு,மார்ச்15

**தமது அரசியல் காய்நகர்த்தல்களில் மிக முக்கியமான முடிவுகளை எடுக்கவேண்டிய இக்கட்டான காலகட்டத்தில் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியும், அரசுத் தலைவருமான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதனை எதிர்கொள்ளும் வகையில் தமது அரசியல் பலத்தை அதிகரிப்பதற்காகப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளந்து, ஆள்களைத் தம்பக்கம் இழுப்பதற்குத் திட்டமிட்டிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

**இதற்காகக் கடந்தவார இறுதியில் ஐ.தே.கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் இருவரை அழைத்து இரகசியமாக அவர்களோடு ஜனாதிபதி பேச்சு நடத்தியிருக்கின்றார் என்றும் தெரிய வருகின்றது.**

அரசமைப்பை மாற்றுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை எதிர்வரும் மே மாதத்திற்குப் பின்னர் ஜனாதிபதி நடத்துவார் என்ற செய்திகள் கசிந்துள்ள நிலையில் -

ஜே.வி.பியினரின் எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல் அமைதி முயற்சிகளைத் தாம் முன்னெடுக்கப்போகிறார் என அவர் அறிவித்துள்ள சூழ்நிலையில் -

ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள அதிருப்தியாளர்கள் குழுவொன்றை விலைக்கு வாங்க ஜனாதிபதி சந்திரிகா இரகசிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார் எனச் செய்திகள் கசிந்துள்ளன. கடந்த வார இறுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான முன்னாள் அமைச்சர்கள் இருவரை ஜனாதிபதி

(16ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் செயலைக் கண்டித்து நல்லூரில் ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம்,மார்ச்15

நீர்வேலிப் பகுதியில் வயோதிபமாதுவை சிப்பாய் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்தமை மற்றும் சாவகச்சேரி, வடமராட்சிப் பிரதேசங்களில் மக்களுக்கு எதிராகப் படையினர் மேற்கொண்ட அடாவடித்தனங்கள் போன்றவற்றைக் கண்டித்து நல்லூரில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

வலி.கிழக்கு பொது அமைப்புகளினால்

(16ஆம் பக்கம் பார்க்க)




மக்களுக்கு எதிராக படையினர் மேற்கொண்டு வரும் அடாவடித்தனங்களை கண்டித்து நேற்று நல்லூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்ட தாய்மார்களை படத்தில் காணலாம்.

*(மேலும் படங்கள் 2 ஆம் பக்கத்தில்)*

### மன்னார் மணல்திட்டில் இறக்கிவிடப்பட்ட

## அகதிப்பெண்மீது வல்லுறவு: கடற்படையினர் விசாரணையில்!

### அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்படுவர்

கொழும்பு,மார்ச்15

தலைமன்னார் ஊர்முனை கடற்படையினர் இருபத்திரெண்டு பேரை இன்று அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்துமாறு மன்னார் நீதிவான் நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய சமயம் தலைமன்னார் கடற்பரப்பில் மணல் திட்டு ஒன்றில் இறக்கிவிடப்பட்டிருந்த தமிழ் அகதிப் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளான சம்பவம் தொடர்பாகவே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பாலியல் வல்லுறவுச் சம்பவம் இம்மாதம்

(16ஆம் பக்கம் பார்க்க)

### அரசியல்துறை அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு,மார்ச்15

மட்டக்களப்பு அரசடியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியல்துறை அலுவலகம் மீது நேற்றிரவு 7.30 மணியளவில் கைக்குண்டு வீசப்பட்டது.

கைக்குண்டு வெடித்ததில் கட்டடத்துக்கு சிறுசேதம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. (8-7)

## பொதுக்கட்டமைப்புத் தொடர்பான புலிகளின் முடிவு அரசுக்குத் தெரியாது

### அரச சமாதானச் செயலகம் கூறுகின்றது

கொழும்பு,மார்ச்15

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களின் முடிவை இன்னும் நோர்வே அனுசரணைத் தரப்பு ஊடாக இலங்கை அரசின் சமாதானச் செயலகத்துக்குத் தெரிவிக்கவில்லையாம்.

- இவ்வாறு அரசின் சமாதானச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பில் நேற்று உதயனுக்குக் கருத்து வெளியிட்ட அரச சமாதானச் செயலகத்தின் பிரதிப்பணிப்பாளர் ஜோன் குணரட்ன. இந்த விடயம் குறித்து உத்தியோகபூர்வமான அறிவிப்பு கிடைத்த பின்னரே அது தொடர்பில் கருத்துகளை வெளியிடமுடியுமென்று சொன்னார்.

"ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளுக்காக அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் பொதுக்கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது தொடர்பான பேச்சுக்கள் கடந்த ஜனவரி மாதம் முதல் நடைபெற்றன. இது

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நீர்வேலிப்பகுதியில் வயோதிப மாது ஒருவரை இராணுவச் சிப்பாய் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்தமையைக் கண்டித்து நேற்று நல்லூரில் மக்கள் நடத்திய கண்டனப் பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பெண்கள் படையினருக்கு எதிரான சுலோகங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கி நிற்பதையும் நல்லூரிலிருந்து பேரணி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகம் நோக்கி புறப்பட்டுச் செல்வதையும் கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்ட தலைவரிடம் மகஜர் கையளிக்கப்பட்ட பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதியுடன் உரையாடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:பிரபா)

## கொக்குவில் பகுதியில் அடிக்கடி மின்தடை!

கொக்குவில் கேணியடிப் பகுதியில் கடந்த சில நாள்களாக இரவில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதாக அப்பகுதி மின்பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மின்சார சபையினருக்கு பல தடவைகள் முறையிட்டும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர். (த)

## லைசென்ஸ் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சை நேரத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச்15

எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவிருந்த சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப்பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தால் அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார். (எ-3)

## சாவகச்சேரி சம்பவம்: டிரக் சாரதியான சிப்பாய் பிணையில்

தென்மராட்சி,மார்ச்15

சாவகச்சேரிச் சந்தியில் கடந்த வெள்ளியன்று நடந்த வீதிவிபத்துடன் சம்பந்தப்பட்ட இராணுவ டிரக்கின் சாரதியான சிப்பாய் ஆள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட எழுதுமட்டுவாழ் 2 ஆம் கொமாண்டோ படையணியில் பணியாற்றும் சாரதியான கற்றோ துரேலாகே என்பவர் சாவகச்சேரி நீதிவான் பா.சுப்பிரமணியம் முன் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

பிரஸ்தாப நபரை 10 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். (எ-117)

## வெளிநாட்டு மருத்துவக்குழுவினர் வன்னிக்கு விஜயம்; அங்கு சிகிச்சை

கிளிநொச்சி,மார்ச்15

மருத்துவ சிகிச்சை முகாமில் கலந்துகொள்வதற்காக இலங்கை வந்துள்ள வெளிநாட்டு வைத்திய குழுவினர் நேற்றுமுன்தினம் வன்னிக்கும் விஜயம் செய்துள்ளனர்.

ஸ்ரீ சத்தியசாயி பகவான் சேவா சமித்தியின் லண்டன் கிளையின் ஏற்பாட்டில் இலங்கையின் பல பாகங்களிலும் மருத்துவ சிகிச்சை முகாமை நடத்துவதற்காக 50 பேரடங்கிய வெளிநாட்டு வைத்தியர் குழு இலங்கை வந்துள்ளது.

நேற்றுமுன்தினம் வன்னிக்கு விஜயம் செய்துள்ள இக்குழு முல்லைத்தீவு வலயக் கல்விப பணிமனைக்குட்பட்ட 28 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கண்சிகிச்சை மற்றும் பொது மருத்துவ சிகிச்சை என்பவற்றை வழங்கவுள்ளது.

இக்குழு வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, திருகோணமலை கல்முனை, கம்புறுப்பிட்டிய ஆகிய இடங்களிலும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை இலவச வைத்திய முகாமை நடத்தவுள்ளது. (த-202)

# மீன் வியாபாரிகளுக்கும் சுனாமியால் பாதிப்பு அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படவில்லை

## வடமராட்சி பிரதேச செயலகங்களில் முறைப்பாடு

கரவெட்டி,மார்ச்15

சுனாமியால் பாதிக்கப்பட்ட - தொழில் வளங்களை இழந்த மீனவர்களுக்கு உதவிகளும் நட்ட ஈடுகளும் ஓரளவு கிடைத்து வருகின்றன. ஆனால், சுனாமியுடன் தமது தொழிலை இழந்த மீன் வியாபாரிகளுக்கு உதவிகளோ நட்டஈடுகளோ வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மீன் வியாபாரிகள் பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பிரதேச செயகங்களிலும் வடமராட்சி அரசியல் துறையினிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தினால் கடற்றொழில் பெரும் அழிவைச் சந்தித்தது. அத்துடன், கடற்றொழிலை நம்பி வாழ்ந்த மீன்வியாபாரிகளுக்கும் தொழில் இழப்பு ஏற்பட்டது என்று கூறப்பட்டது.

இந்தநிலையில், கடற்றொழிலாளர்களின் தொழில் இழப்புகளுக்கு நட்டஈடுகளும் நிவாரணங்களும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றபோதிலும் தமக்கு எந்தவிதமான இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை என்று மீன் வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுனாமியால் தமக்கு ஏற்பட்ட தொழில் இழப்புகள் தொடர்பாகப் பதிவு செய்துகொள்வதற்காகக் கிராமசேவையாளர்கள் அணுகியபோது அவர்கள் மீன்வியாபாரம் செய்வதற்கான ஆவணத்தைத் தருமாறும் கேட்கின்றனர் என்றும் -

ஆனால், இதுவரை மீன் வியாபாரிகள் எவருக்கும் அவர்களது தொழிலை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் எவையும் வழங்கப்படவில்லை என்றும் - அவர்கள் தெரிவித்தனர். (த-70)

# பூநகரி கிராமிய அபிவிருத்தி வங்கியின் 12 ஆவது ஆண்டு நிறைவுவிழா நேற்று

பரந்தன்,மார்ச்16

பூநகரி கிராமிய அபிருத்தி வங்கியின் 12 ஆவது ஆண்டு நிறைவுவிழா நேற்று இடம் பெற்றது.

வங்கி மேலாளர் க.கௌரிசங்கர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஏற்றிவைத்தார்.

நிகழ்வில் பூநகரிப் பங்குத்தந்தை றியோ ஆம்ஸ்ரோங், பூநகரி கமநலச்சேவை பெரும்போக உத்தியோகத்தர் எஸ்.சுந்தரமூர்த்தி, பூநகரி மகாவித்தியாலய அதிபர் பொன்.தில்லைநாதன், சி.கரிகாலன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து 9 பயனாளிகளுக்கு சூரியமின் கலங்களும் 5 பயனாளிகளுக்குத் தையல் இயந்திரமும் ஒரு பயனாளிக்கு நீர் இறைக்கும் இயந்திரமும் இலகு கடன் அடிப்படையில் வழங்கப்பட்டன.

தளிர்கள் சேமிப்புக் கணக்கில் வைப்புக்களை வைத்தவர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கான சேமிப்புக் கணக்கில் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

கிராமிய அபிவிருத்தி வங்கி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் 1993 ஆம் ஆண்டு கிராமிய நிதியம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

இன்றுவரை 11 கிளைகளுடன் இந்த வங்கி செயற்பட்டுவருகிறது. இந்த வங்கிகள் ஊடாக விவசாயக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. உழவு இயந்திரங்கள் மற்றும் தொழில் உபகரணங்களும் கடன் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. (த.202-353)

## திருத்தம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது அகவையை ஒட்டி விடுதலைப் புலிகள் கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் வகுப்பறை மண்டபம் ஒன்றை அமைத்தனர். அந்த மண்டபத்தை பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் தமிழீழ நிதிப்பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி ஆற்றிய உரையின் தொகுப்பு கடந்த சனிக்கிழமையும் நேற்றும் உதயனில் பிரசுரமாகியது. அந்தச்செய்தியில் இரண்டு தகவல்கள் தொடர்பான சரியான நிலைப்பாட்டை நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி சுட்டிக்காட்டியுள்ளார். அவை வருமாறு:-

★ சேரமான் பெருமான் நாயனார் தமது கடைசிக் காலத்தில் ஒன்பதாம் நூற்றாண்டில் எழுதிய நூலின் பெயர் திருவெண்ணத்தந்தாதி என்று பிரசுரமாகியுள்ளது. அது தவறு. அந்தநூலின் பெயர் பொன்வண்ணத்தந்தாதி ஆகும்.

★ வெளிநாட்டவர் நம்மை அடிமைப்படுத்தியிருந்த நிலைமை தொடர்பாக நிதிப்பொறுப்பாளர் சுட்டிக்காட்டிய அம்சம் இதுதான்:- "ஒரு காலத்தில் தமிழரை வெளிநாட்டவன் அடிமைப் படுத்தி இங்கு வைத்திருந்தான். அவனுக்கு அடிமையாக இங்கே இருந்து பணியாற்றினோம். அவன் இப்போது போய்விட்டான். ஆனால், இங்குள்ள சூழ்நிலையால் வெளிநாடுகளுக்குச் செல்லும் நாம் அங்கும் எமது மொழியை இழப்பதன் மூலம் எமது இன அடையாளத்தை இழந்து அழிந்து கொண்டிருக்கின்றமை கவலைக்குரியது. இநநிலையிலிருந்து மீள்வதற்கு உலகம் முழுவதிலும் வாழும் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். இது இன்று காலத்தின் கட்டாயமாகும்" - என்பதாகும்.

நிதிப் பொறுப்பாளரின் உரைத் தொகுப்பில் இவ்விரு திருத்தங்களையும் கவனத்தில் கொள்ளுமாறு வாசகர்களை வேண்டுகிறோம். (ஆ-ர்)

# சத்திரசிகிச்சைக் கற்கை நெறியை மீண்டும் ஆரம்பிக்கக் கோரி பேரணி

## மருத்துவ மாணவர்கள் ஒன்றிணைந்து நடத்தினர்

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள சத்திர சிகிச்சைக் கற்கை நெறியை மீண்டும் உடனடியாக ஆரம்பிக்கக்கோரி பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

கடந்த மூன்று மாதகாலமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள சத்திரசிகிச்சைக் கற்கை நெறிகளை மீள ஆரம்பிக்குமாறு கோரியும் -

இதுவிடயத்தில் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் காட்டிவரும் அசமந்தப் போக்கினைக் கண்டித்துமே மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்கள் ஏனைய வருட மாணவர்களையும் ஒன்று சேர்த்து நேற்று இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியதாக மருத்துவபீட மாணவர்கள் ஒன்றியம் தெரிவித்தது.

நேற்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம் முன்பாக ஒன்று கூடிய மாணவர்கள், அங்கிருந்து காலை 9 மணிக்கு சுலோக அட்டைகள், பதாகைகள் என்பனவற்றைத் தாங்கியவாறு பேரணியாகப் புறப்பட்டனர்.

ஆடியபாதம் வீதி, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி ஊடாக பல்கலைக்கழக வளாகத்தை காலை 10 மணியளவில் இவர்கள் வந்தடைந்தனர்.

துணைவேந்தரின் அலுவலகக் கட்டடப் பகுதியைச் சூழ்ந்துகொண்ட மருத்துவ மாணவர்கள, நிர்வாகத்தின் அசமந்தப் போக்கினைக் கண்டிததும், கற்றல் செயற்பாடுகளை மீள் ஆரம்பிக்கக கோரியும் கோஷங்களை எழுப்பினர்.

பின்னர் இவர்களில் ஒரு பகுதியினர் பஸ் ஒன்றில் சென்று ஜனாதிபதிக்கான மகஜரை மாவட்ட செயலகத்தில் வைத்து யாழ்.அரச அதிபரிடம் கையளித்தனர்.

அதனைத் தொடர்ந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்துக்குச் சென்ற இவர்கள், அங்கும் மகஜரைக் கையளித்தனர்.

துணைவேந்தர் அலுவலகக் கட்டடப் பகுதிக்குள் எவரும் உள்ளே செல்லவோ வெளியே வரவோ அனுமதிக்கப்படவில்லை. நேற்றைய ஆர்ப்பாட்ட பேரணி காரணமாக மருத்துவபீடத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் செயலிழந்தன.

தமக்கு ஒரு தீர்வு கிட்டும் வரையில் போராட்டம் தொடர்ந்து நடத்தப்படும் என்று இறுதிவருட மாணவர்கள் தெரிவித்தனர். (எ-7-86-15)



யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திரசிகிச்சை கற்றை நெறிகளை மீண்டும் ஆரம்பிக்கக்கோரி மருத்துவ பீட மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மருத்துவபீட மாணவர்கள் பலாலி வீதியூடாக சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு பேரணியாகத் துணைவேந்தரின் அலுவலகம் நோக்கிச் செல்வதையும் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்வதையும் ஜனாதிபதிக்கான மகஜரை யாழ்.அரச அதிபர் கே.கணேஸிடம் அவரது அலுவலகத்தில் வைத்துக் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:பிரபா, நேசன்)

# சட்டவிரோதக் குடியிருப்புகளை அகற்ற இஸ்ரேல் அரசு முடிவு!

ரெல்அவிவ்,மார்ச்15

பலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பகுதியில் சட்டவிரோதமாக ஏற்படுத்தப்பட்ட யூதக் குடியிருப்புகள் அனைத்தையும் களைவதற்கு - அகற்றுவதற்கு - இஸ்ரேலிய அரசு முடிவு செய்துள்ளதாக டெல் அவிவ் செய்திகள் தெரிவித்தன.

இஸ்ரேலியத் தலைநகர் ரெல் அவிவைத் தளமாகக் கொண்டு இயங்கும் வானொலிகள் வெளியிட்ட தகவல்கள் மேற்படி செய்திகளை உறுதிசெய்வதாய் அமைந்துள்ளன.

இஸ்ரேலியப் பிரதமராக ஏரியல் ஷெரோன் பதவியேற்று நான்கு ஆண்டுகளின் பின்னர் இவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இஸ்ரேல் - பலஸ்தீன சமாதான முயற்சிகளுக்கு இந்த நடவடிக்கை மிகப்பெரும் உந்துசக்தியாக அமையும் என அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான சட்டவிரோத யூதக் குடியிருப்புகள் அமைக்கப்படுவதில் இஸ்ரேலிய அரசு உடந்தையாக இருந்தது என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாகவும் அமைச்சரவை மட்டத்தில் பரிசீலிக்கவேண்டும் என்று அமைச்சரவை உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோதக் குடியிருப்புகளுக்கு இஸ்ரேலிய அரசு நிதியுதவியும், இராணுவப் பாதுகாப்பும் வழங்கியது என்று கடுமையாக விமர்சிக்கும் அறிக்கைகள் வெளியானதையடுத்தே இவ்வாறான முடிவுகள் வெளிவருகின்றன என்று செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி இஸ்ரேலிய அரசு எடுத்திருக்கும் சட்டவிரோதக் குடியிருப்புகளை அகற்றும் திட்டத்தால் 24 குடியிருப்புகள் பாதிக்கப்படும் எனத் தெரிகிறது.

அத்தோடு, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் இஸ்ரேல் செல்வதற்கு முன்னதாகவே அமைச்சரவை கூடி இந்த முடிவை எடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மத்தியகிழக்கிற்கான தனது விஜயத்தின் போது முதலில் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனுடனும் பின்னர், பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸுடனும் கொபி அனான் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(க-3)

## பாப்பாண்டவர் மீண்டும் இல்லம் திரும்பினார்

லண்டன்,மார்ச்15

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் வைத்திய சாலையில் இருந்து நேற்றுமுன்தினம் ரோமில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு மீண்டும் திரும்பியுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மூச்சுத்திணறல் காரணமாக அறுவைச் சிகிச்சைக்காக ரோமில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர், நேற்றுமுன்தினம் அவருடைய இருப்பிடத்திற்குத் திரும்பியுள்ளார்.

அவருக்குச் சிகிச்சையளித்த வைத்தியர்கள் மற்றும் அவருக்காக மன்றாடிய மக்கள் ஆகியோருக்கு பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் தனிப்பட்ட முறையில் நன்றி கூறினார்.

அவர் குணமடைந்து தனது வாசஸ்தலத்திற்குத் திரும்பிய போதிலும் இம்மாதத்தில் நடைபெறவுள்ள உயிர்த்த ஞாயிறு சிறப்புப் பூஜைகளில் குறைவாகவே கலந்துகொள்வார் எனவும் -

ஆனால், உயிர்த்த ஞாயிறு தினத்தன்று அவர் விசுவாசிகள் முன்தோன்றி வழமையாக வழங்கும் ஆசீர்வாதத்தை இந்த முறையும் வழங்குவார் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(க-3)

# காலநிலை மாற்றத்தினால் இமயமலை பனிப்பாறைகள் உருகும் அபாயம்

## டபிள்யூ.டபிள்யூ.எவ். அமைப்பு எச்சரிக்கை

காலநிலை மாற்றங்களினால் இமயமலையின் பனிப்பாறைகள் நாளுக்குநாள் வெகு வேகமாக உருகிவரும் அபாயம் ஏற்பட்டுள்ளது என டபிள்யூ.டபிள்யூ.எவ். அமைப்பின் தலைவர் ஜெனிபர் மோர்கன் எச்சரித்துள்ளார்.

அண்மையில் டபிள்யூ.டபிள்யூ.எவ். அமைப்பினால் லண்டனில் நடத்தப்பட்ட உலகளாவிய காலநிலை மாற்றத்திற்கான நிகழ்ச்சித்திட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சுமார் 20 தொழில்வள நாடுகளின் அமைச்சர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சியில் அவர் மேலும் கூறியதாவது:-

நாளுக்குநாள் ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றத்தினால் இமயமலையின் பனிப்படுக்கைகள் உருக ஆரம்பித்துள்ளன.

இந்நிலையினால், எதிர்வரும் சில தசாப்தங்களில் சீனா, நேபாள், இந்தியா ஆகிய நாடுகள் வெள்ளத்தையும் அதன் பின்னர் வரட்சியையும் எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்படும்.

இந்த வரட்சியின் காரணமாகக் கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்திற்கு எதிராக உடனடி நடவடிக்கை மேற்கொண்டால் மட்டுமே வருடாந்தம் இமயமலையின் பனிப்பாறைகள் உருகும் நிலையைத் தடுக்க முடியும். பனிப்பாறைகள் உருக ஆரம்பிக்கும் போது இமயமலையிலிருந்து ஆரம்பிக்கும் ஆறுகளின் நீர்மட்டம் சிறிது சிறிதாக உயர ஆரம்பித்து பின்னர் வெள்ளமாக மாறும். இந்தக் காலநிலை மாற்றத்தினால் மேற்கு சீனா, நேபாளம் மற்றும் வட இந்தியா ஆகியன அதிகளவு பாதிக்கப்படும்.

(க-3)

# தென்கிழக்காசியாவின் வரட்சியைத் தடுக்க அந்நாட்டு அரசுகள் அவசர நடவடிக்கை

தென்கிழக்காசியாவில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மோசமான வரட்சியைத் தடுப்பதற்கான அவசர நடவடிக்கைகளை அப்பிராந்திய நாடுகள் மேற்கொண்டுள்ளன.

தாய்லாந்து அரசு அந்த நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக தேசிய அவசர நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

முடியுமான பகுதிகளில் மழையைப் பெய்யச்செய்வதற்காக மேகவிதைப்பு எனப்படும் மழைமேகங்களைப் பெய்யத்தூண்டும் நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு மேற்கொண்டுள்ளது.

மேலும், தூய்மையான குடிதண்ணீரை விநியோகிப்பதற்கு இராணுவத்தினருக்கு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, தென்கிழக்காசியாவின் மற்றுமொரு நாடான கம்போடியாவில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக லட்சக்கணக்கான மக்கள் அவதியுறுகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தண்ணீர் பற்றாக்குறை காரணமாக உழைப்பு மற்றும் ஊதியம் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உதவுவதற்கு கம்போடிய அரசு சர்வதேச உதவியைக் கோரியுள்ளது.

வியட்நாமில் கடந்த 30 வருடங்களில் இல்லாத வகையில் ஏற்பட்டுள்ள கடும்வரட்சி காரணமாக அந்த நாட்டின் கோப்பிப் பயிர்ச்செய்கை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

(க-3)

# சீன இராணுவத்தின் தலைமைத் தளபதியாக அந்நாட்டு ஜனாதிபதி ஜிந்தாவு தெரிவு

பீஜீங்,மார்ச்15

சீன ஜனாதிபதியான ஹுஜிந்தாவு அந்நாட்டு இராணுவத்தின் தலைமையகத் தளபதியாக மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தேசிய மக்கள் காங்கிரஸ் எனப்படும் சீன நாடாளுமன்றத்தில் நடைபெற்றுவரும் 10 நாள் ஆண்டுக் கூட்டத்தொடரிலேயே இவர் தலைமைத் தளபதியாக நேற்றுமுன்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

62 வயதான ஹு ஜிந்தாவு அந்நாட்டின் ஜனாதிபதி மட்டுமன்றி தனது கட்சியின் தலைவருமாவார். அப்பதவிகளுடன் அவர் இராணுவத் தலைமைத் தளபதி பதவியையும் பெற்று, சீனாவின் சக்திமிக்க தலைவராக விளங்குகிறர்.

சீன நாடாளுமன்ற ஆண்டுக் கூட்டத்தில் சுமார் 3 ஆயிரம் மக்கள் பிரதிநிதிகள் கலந்துக் கொண்டுள்ளனர்.

இவர்களுள் இரண்டாயிரத்து 8:86 பேர் ஜிந்தாவுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். எதிராக ஆறு பேர் வாக்களித்துள்ளனர். மக்கள் பிரதிநிதிகளில் 5 பேர் வாக்கெடுப்பில் கலந்துக் கொள்ளவில்லை.

மக்கள் பிரதிநிதிகளின் ஆதரவுடன் உலகின் மிகப்பெரிய இராணுவமான சீன இராணுவத்தின் தலைமைத் தளபதி என்னும் அந்தஸ்த்தை ஜிந்தாவு பெற்றுள்ளார். இதுவரை அந்தப் பதவியிலிருந்து இருந்த 78 வயதான ஜியாங் ஜூமீன் அப்பதவியிலிருந்து இம்மாதம் 4 ஆம் திகதி பதவி விலகியதைத் தொடர்ந்தே ஜிந்தாவு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திபெத்தில் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளராக அரசியல் வாழ்வை ஆரம்பித்த ஜிந்தாவு 2002 மார்ச் மாதம் சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜியாங் ஜூமின் பதவி விலகியதைத் தொடர்ந்து ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தற்போது மத்திய இராணுவ கமிஷன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதையடுத்து அவர் ஆட்சி, கட்சி, இராணுவம் ஆகியவற்றின் அனைத்து அதிகாரங்களையும் கொண்ட சக்திமிக்கத் தலைவராக அவர் விளங்குகின்றார்.

(க-3)

# ஈரானுடன் சுமுகமான உறவை ஏற்படுத்த அமெ. முயலவேண்டும்

## மூத்த அதிகாரி ஹுசைன் தெரிவிப்பு

ஈரானின் அணுத்திட்ட விவகாரம் காரணமாக எழுந்துள்ள பதற்றநிலையைக் குறைக்கும் வகையில் - நல்லெண்ண நோக்கில் - அமெரிக்க - ஈரான் உறவுகளை சுமுகமாக்கும் வகையிலான நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ளவேண்டும் என்று ஈரானின் அணு விவகாரம் தொடர்பில் சமரசப் பேச்சுக்களை நடத்தும் மூத்த அதிகாரி ஹுசைன் மொசாவியன் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமியப் புரட்சியை அடுத்து முடக்கப்பட்ட ஈரானின் சொத்துக்களை அமெரிக்கா விடுவிக்கவேண்டும் என்றும் -

ஈரான் மீதான அமெரிக்கத்தடைகள் நீக்கப்பட்டு, பிராந்தியத்தில் ஈரானுக்கு எதிரான பகைமை நடவடிக்கைகளை அமெரிக்கா கைவிடவேண்டும் என்றும் - ஹுசைன் மொசாவியன் வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்தார்.

தமது அணுத்திட்டம் முற்றுமுழுதாக அமைதி நோக்கத்திலானது என்பதை நிரூபிப்பதற்கான- நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான - நடவடிக்கைகளை ஈரான் மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினார்.

ஈரான் தனது அணுச்செறிவாக்கல் நடவடிக்கைகளை நிரந்தரமாக நிறுத்துவதற்காக கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க அரசு சில பொருளதாரச சலுகைகளை வழங்க முன்வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அணுசக்தித்திட்டத்தை உருவாக்குவதற்கான தமது உரிமையில் வெளிநாட்டு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதை அனுமதிக்கமுடியாது என்று கூறி அமெரிக்காவின் மேற்படி பொருளாதாரச் சலுகைகளை ஏற்க ஈரான் அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.




## எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்கள் மீது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழு

**மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக அதிமேதகு சனாதிபதி அவர்களால் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட சனாதிபதி ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.**

**1. வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி - திரு.ஜே.விஸ்வநாதன் அவர்கள் - தவிசாளர்**

**2. அம்பாறை மேல் நீதிமன்ற நீதிபதி - டப்ளியூ. ரீ.எம்.பி.பி.வராவெவ அவர்கள் - உறுப்பினர்**

**இவ்வாணைக்குழு பொதுமக்களிடமிருந்தும், படைத்தரப்பினரிடமிருந்தும் , பொலீஸாரிடமிருந்தும், எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்களிடமிருந்தும் சாட்சியங்களைப் பெற்று, எத்தகைய சூழ்நிலைகளில் எந்த நோக்கத்திற்காக இத்தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என ஆராயவுள்ளது.**

**மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் 2005 பெப்ரவரி 01 தொடக்கம் 2005 மார்ச் 02 வரையிலுமான காலப்பகுதியில் சுடுகலன்கள், வெடிபொருள்கள் மூலம் நிகழ்த்தப்பட்ட கொலைகள், காயம் விளைவித்தல் அல்லது கொலை முயற்சி, காயம் விளைவிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி தொடர்பாக மட்டுப்படுத்தப்பட்ட விடயங்கள் பற்றிய சாட்சியங்கள் அம்பாறை நீதிமன்ற வளவில் 2005 மார்ச் 28 ஆம் திகதி தொடக்கம் 2005 ஏப்ரல் 01ஆம திகதி வரையும் மட்டக்களப்பு நீதிமன்ற வளவில் 2005 ஏப்ரல் 4ஆம் திகதி தொடக்கம் 2005 ஏப்ரல் 08 ஆம் திகதி வரையும் இடம்பெறும்.**

**இவ்விசாரணையின்போது சாட்சியமளிக்க விரும்புகின்றவர்கள் அல்லது எழுத்துமூலமான சான்றினை முன்வைக்க விரும்புகின்றவர்கள் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை ஆணைக்குழுவின் செயலாளருக்கு 2005 மார்ச் 24 அல்லது அதற்கு முன்னர் வழங்க வேண்டும்.**

*திரு.எம்.ஆர்.கலீல்*
*ஆணைக்குழுவின் செயலாளர்,*
*மேல் நீதிமன்றம்,*
*அம்பாறை.*

(சி-41493)(33-14-15-16-29)

திரு.எம்.ஆர்.கலீல்.
ஆணைக்குழுவின் செயலாளர்.

உதயன் ஊடக அனுசரணையுடன்

# மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

# நாளை ஸ்கந்தாவில் ஆரம்பமாகின்றது

## எல்லைப்படை மாவீரர் கிண்ணத்துக்காக 57 கழகங்கள் மோதுகின்றன

யாழ்ப்பாணம்,மார்ச்15

எல்லைப்படை மாவீரர் நினைவாகச் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவினரின் ஆதரவில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை புதன்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டி அடுத்த மாதம் 11ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும். தினமும் இரு ஆட்டங்கள் இடம்பெறும். முதலாவது ஆட்டம் பிற்பகல் 3.30 மணிக்கும் இரண்டாவது ஆட்டம் 4.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 57 விளையாட்டுக் கழகங்கள் இந்தச் சுற்றுப்போட்டியில் மோதுகின்றன.

நாளை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி - சில்வஸ்ரார் வி.க. எதிர் யங்கம் பன்ஸ் வி.க.

★ பிற்பகல் 4.30 மணி - ஞானமுருகன் வி.க. எதிர் பொற்பதி வி.க.

(3-70-86-190)



யாழ். மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்லூரியின் பழைய மாணவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்த்துறைப் பிரிவுப் பணிப்பாளருமான ரீ.உருத்திராபதி உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். சிறப்பு விருந்தினர் பே.நாகரத்தினம், அதிபர் க.இராசதுரை, பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் க.இருதயராஜன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் காணலாம். (3-202)

தீவக வலய வலைப்பந்தாட்டம்

# சிறிய புஸ்பம் மகளிர் பாடசாலை மூன்று பிரிவுகளிலும் முதலிடம்

யாழ்ப்பாணம்,மார்ச்15

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலயமட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவுக்கான போட்டியில் கரம்பன் சிறியபுஸ்ப மகளிர் மடம் பாடசாலை 15,17,19 வயதுப் பிரிவுகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

15 வயதுப்பிரிவில் வேலணை மத்திய மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தையும் 17 வயதுப் பிரிவில் புங்குடுதீவு மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தையும், 19 வயதுப்பிரிவில் வேலணை மத்திய மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

ஆண்களுக்கான கரபந்தாட்டப் போட்டியில் 15வயதுப் பிரிவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி முதலாம் இடத்தையும், காரைநகர் கல்லூரி இரண்டாமிடத்தையும் பெற்றன.

17 வயதுப்பிரிவில் நயினாதீவு ஸ்ரீகணேசா மகா வித்தியாலயம் முதலாமிடத்தையும், வேலணை மத்திய மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தையும் பெற்றன.

19 வயதுப்பிரிவில் நயினாதீவு ஸ்ரீ கணேசா ம.வி. முதலாமிடத்தையும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி இரண்டாமிடத்தையும் பெற்றன.

(3- 51)

# சென்.ஜோன்ஸ் - பல்கலைக்கழகம் மோதல் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது

## தனேஸ்காந்தன், மதன்ராஜ் சதம் அடித்தனர்

யாழ்ப்பாணம், மார்ச்15

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் யாழ். பல்கலைக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

இந்தப் போட்டி சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணியினர் 8 விக்கெட்டுக்களை இழந்து 283 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தினை நிறுத்திக்கொண்டது.

சர்வனந்தன் 77 ஓட்டங்களையும் கௌரிபாகன் 53 ஓட்டங்களையும், ஜெயந்தன் 41ஓட்டங்களையும், அருள் 35 ஓட்டங்களையும் ஜெயந்தன் ஆட்டம் இழக்காமல் 24 ஓட்டங்களையும் தம் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர் மதன்ராஜ் 42 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

இதில் நேசவர்மன் 25 ஓட்டங்களையும் அம்புஜன் 29 ஓட்டங்களையும் மயூரதன் 30 ஓட்டங்களையும் மதன்ராஜ் 26 ஓட்டங்களையும் சஞ்ஜீவன் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ். பல்கலைக்கழக அணி வீரர் அருள் 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சர்வனந்தன் 31 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியது.

கௌரிபாகன் 55 ஓட்டங்களையும் தனேஸ் காந்தன் 118 ஓட்டங்களையும் தம் அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர் நிருபன் 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், மதன்ராஜ் 46 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் வீழ்தினர்.

298 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என களம் இறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி ஆட்ட முடிவு நேரத்தில் 8 விக்கெட்டுக்களை இழந்து 277 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

நேசவர்மன் 30 ஓட்டங்களையும், மயூரதன் 22 ஓட்டங்களையும் மதன்ராஜ் 106 ஓட்டங்களையும், நவகீதன் ஆட்டம் இழக்காமல் 44 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பல்கலைக்கழக அணி வீரர் சர்வனந்தன் 63 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், அருள் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.(3-190)

# வடக்கின் பெரும்போர் வியாழன் முதல் 3 தினங்கள்

யாழ்ப்பாணம், மார்ச்15

"வடக்கின் போர்" (Battle of The North) என வர்ணிக்கப்படும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான 99ஆவது மாபெரும் துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வருடம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்குத் தெய்வகுலரட்ணம் மதன்ராஜும் மத்திய கல்லூரி அணிக்குக் கணேசலிங்கம் றொகானும் தலைமை வகிக்கின்றனர்.

இதுவரை நடைபெற்ற போட்டிகளின் சென்.ஜோன்ஸ் கல்லூரி 33 போட்டிகளிலும் மத்திய கல்லூரி 22 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

36 ஆட்டங்கள் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்துள்ளன.

7 போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியில் அங்கம் வகிக்கும் வீரர்கள் பெயர் விவரம் வருமாறு:-

மதன்ராஜ் (அணித்தலைவர்), ஆனந்தராஜ் அன்புஜன் (உதவித் தலைவர்), தவரட்ணராஜா நவகீரன், பத்மநாதன் சகிந்தன், தவராஜா நீருபன், பரதன் கஜரூபன், அகஸ்ரின் கிறிஸ்ஷான், கனேந்திரன் சஞ்சீவன், நாதன் தினேஷ், ஏ.மயூரதன், பத்மநாதன் நேசவர்மன், வாமதேவ ராகுலன், தர்மகுலசிங்கம் கிருஷாந், அமலநாதன் அக்ஷயன், காந்தி ராஜவெள்ஷாகர்.

மத்திய கல்லூரி அணியில் அங்கம் வகிக்கும் வீர்களின் பெயர் விவரம் வருமாறு:

கே.றொகான் (அணித்தலைவர்), கமிலேந்திரன் கலீஸ்டன் (உப தலைவர்), மகாலிங்கம் யசோதரன், பிரான்ஸிஸ் சேவியர் மயூரன், செல்வரட்ணம் சத்தியன், ஜோசப் ராஜரட்ணம் ஏபிரகாம் பிரசாந், குணசேகரம் மகீபன், ஜெகநாதன் விஜயன், நாகநாதன் மகிப்பிரியன், டெண் பொஸ்கோ சுதர்சன், நவரெட்ணலிங்கம் நவநீத், குலேந்திரன் ஷொல்ரன், பாஸ்கரன் தயான், மகேந்திரன் மயூரன், ஜெகநாதன் அன்ரன் மயூரன், ஜெயகாந்தன் நிலான், ராசதுரை வினோத்குமார். (3-190)




நல்லூர்க் கோட்டக் கரபந்தாட்டம்

# யாழ். இந்துக் கல்லூரி அணி மூன்று பிரிவுகளையும் தனதாக்கியது

நல்லூர்க் கோட்ட மட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளின் 15, 17, 19 வயது அணிகளுக்கு நடத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி மூன்று பிரிவுகளிலும் முதலிடம் பெற்றது.

இச்சுற்றுப்போட்டியின் முடிவுகள் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

யாழ். இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மகா வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**

யாழ். இந்துக் கல்லூரி, செங்குந்த இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மகா வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

யாழ். இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மகா வித்தியாலயம், செங்குந்த இந்துக் கல்லூரி.

(3-190)

# யாழ். பாடசாலைகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி ஏப்ரல் 9 ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளன.

☆ உதைபந்தாட்டம் - 9, 10, 11 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும் -

☆ மென்பந்து துடுப்பாட்டம் - 16, 17ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும் -

☆ கரபந்தாட்டம் - 20, 21ஆம் திகதிகளில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்திலும் -

☆ வலைப்பந்தாட்டம் - 23, 24, 25 ஆம் திகதிகளில் உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்திலும் -

☆ பூப்பந்து - மே மாதம் 7, 8 ஆம் திகதிகளில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் -

☆ மேசைப்பந்தாட்டம் - மே மாதம் 10, 11 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியிலும் -

☆ மெய்வன்மைப் போட்டி - மே மாதம் 19, 20, 21ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும் - நடைபெறவுள்ளன. (3-190)

## மெய்வன்மைப் போட்டி

வட்டக்கச்சி, மார்ச்15

கிளிநொச்சி நாகேந்திரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் சிநந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக் கண்டாவளைக் கோட்டக்கல்வி அலுவலர் வீ.இராசகுலசிங்கமும், சிறப்புவிருந்தினர்களாகக் கிளிநொசசி மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.ஜீவராஜ், கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி கௌ.சந்திரசேகரம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக மக்கள் வங்கியின் பரந்தன் கிளையின் முகாமையாளர் சி.கந்தசாமியும் கலந்து கொள்ளவுள்ளனர். (3-405)

## உடற்பயிற்சிப் போட்டி

குருநகர்,மார்ச்15

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (3-51)

தென்மராட்சி கோட்ட உடற்கல்விப் போட்டி

# டிறிபேர்க், மகளிர் கல்லூரி முதலிடங்களைப் பெற்றன

தென்மராட்சி,மார்ச்15

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உடற கல்விப் போட்டிகளில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆண்கள் பிரிவிலும், சாவகச்சேரி மகளிர்கல்லூரி பெண்கள் பிரிவிலும் முதலிடங்களைப் பெற்றன.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு.

**ஆண்கள் பிரிவு**

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.

**பெண்கள் பிரிவு**

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, கச்சாய் அ.த.க. பாடசாலை(3-117)

# பாடும் மீன், கலைவாணி, அரியாலை விளையாட்டுக் கழகங்கள் வெற்றி

## உதைபந்தாட்ட லீக்கின் சுற்றுப்போட்டியில்

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டுவரும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் பாடும் மீன், கலைவாணி, அரியாலை ஆகிய விளையாட்டுக் கழகங்கள் வெற்றிபெற்றன.

முதலில் நடைபெற்ற ஆட்டத்தில் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தின் 'ஏ' அணியை எதிர்த்து சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. இதில் பாடும் மீன் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் கலைவாணி விளையாட்டுக் கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மூன்றாவது ஆட்டத்தில் சென். மைக்கல் அணியை எதிர்கொண்டு அரியாலை விளையாட்டுக்கழகம் விளையாடியது.

விறுவிறுப்பாக அமைந்த இந்த ஆட்டத்தில் இரண்டும் அணியும் தலா ஒரு கோலினைப் போட்டதால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. இதனால் வெற்றி, தோல்வி காண்பதற்காகச் சமநிலை உடைப்பு உதை (பெனல்ரி) வழங்கப்பட்டது.

இதில் அரியாலை விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.(3-190)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பாகிஸ்தான் தலையீடு: இந்தியாவுக்கு எச்சரிக்கை

விடுதலைப் புலிகள் இயக்கம் விமானப்படை ஒன்றை அமைத்து அதனை விஸ்தரித்து, விருத்தி செய்து வருவதாகச் செய்திகள் வெளியான பின்னணியில் விமான நகர்வுகளைத் துல்லியமாகக் கண்டறியும் நவீன 'ரடார்' கருவி வசதிகளை இலங்கைக்கு வழங்குவதற்குப் பாகிஸ்தான் முன் வந்திருப்பதாகவும் செய்திகள் கசிந்துள்ளன. இந்நடவடிக்கைக்கு அமெரிக்க அரசின் ஆதரவும், ஆசீர்வாதமும் கூட பின்னணியில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கம் தனக்கென விமானத்தளம், விமானப்படை ஆகியவற்றை அமைத்து, விமானங்களைச் சுவீகரித்தது மட்டுமல்லாமல் விமானத்தளத்துக்கான வான் வழிப் பாதுகாப்பு வலையமைப்பையும் நிறுவியுள்ளது எனக் கிடைத்த ஊடகத் தகவல்கள் இலங்கை அரசுத் தலைமையைப் பீதியில் கிலிகொள்ள வைத்திருக்கின்றன எனத்தெரிகின்றது.

புலிகளின் இந்த நடவடிக்கை குறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு, நோர்வே அனுசரணையாளர்கள் எனப் பல தரப்பினரிடமும் இலங்கை அரசு முறையிட்டுள்ளது.

இலங்கை அரசு, அமெரிக்காவிடமும் முறையீடு செய்து உதவியும் பாதுகாப்பும் கோரி மண்டியிட்டது. இவ்விவகாரம் தொடர்பாக இலங்கை ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலிஸா ரைஸுக்கு இறைஞ்சிக் கடிதம் எழுதியிருந்தார் எனச் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

அந்த இறைஞ்சுதலுக்கே இப்போது கைமேல் பலன் கிட்டியிருக்கின்றது.

அமெரிக்க ஆசீர்வாதத்துடன் நவீன 'ரடார்' கருவிகள் பாகிஸ்தான் மூலம் இங்கைக்குக் கிடைக்கவிருக்கின்றன.

விடுதலைப் புலிகளிடம் இருப்பதாகக் கூறப்படும் விமானங்களின் நகர்வுகளைத் துல்லியமாகவும், தெளிவாகவும் இந்த 'ரடார்'கள் கண்டுபிடித்து இலங்கைப் பாதுகாப்புத் தரப்புக்கு வெளிப்படுத்துமா என்பது ஒருபுறமிருக்க, பாகிஸ்தானின் உதவியுடன் உயர் தொழில்நுட்ப 'ரடார்'களை இலங்கைக்குள் செயற்படுத்துவது இலங்கை விவகாரத்தில் பாகிஸ்தானின் பங்களிப்பையும், அதற்குச் சார்பான திறமையையும் எவ்வளவு தூரம் அதிகரிக்கவைக்கும் என்பதும் மறுபுறத்தில் கவனிக்கப்படவேண்டியவை ஆகும்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிலையத்தில் அமைந்துள்ளது. இங்கு தனது ஏற்பாட்டில் ஓர் உயர்தொழில்நுட்ப 'ரடார்' கருவித் தொகுதியைப் பொருத்த உதவும் சாக்கில் இப்பிராந்தியத்தின் சகல வான்நகர்வுகளையும் தான் அறிந்துகொள்ளும் ஒரு வலிமையை இத்தொழில்நுட்பத்தில் உயர்ந்த திறமையும், பரிச்சயமும் உள்ள ஒரு நாடு இலகுவில் சுவீகரித்துக் கொள்ளமுடியும் என்பதும் கவனிக்கப்படவேண்டிய அம்சமாகும்.

புலிகளின் விமான அச்சுறுத்தல் என்ற போர்வையில் பாகிஸ்தானும், அதன் ஞானத் தந்தையான அமெரிக்காவும் தமது உயர்தொழில்நுட்பக் கருவிகள்மூலம் பாதுகாப்பு முன்னேற்பாடுகளுக்கு உதவக்கூடிய அம்சங்களுடன் இங்கு காலூன்றக்கூடிய வாய்ப்பு இருப்பதை அடியோடு ஒதுக்கிவிட முடியாது.

இதுபற்றி அதிக சிரத்தை கொள்ளவேண்டிய நாடு, இலங்கைக்கு முன்னர் இந்தியா என்பதுதான் முக்கிய அம்சமாகும்.

அமெரிக்க ஆதரவோடு பாகிஸ்தான் ஏற்பாட்டில் இலங்கையில் உயர்தொழில்நுட்ப 'ரடார்' வசதிகளைப் பொருத்துவது இந்தப் பிரதேசத்தின் வல்லாதிக்க நாடான இந்தியாவின் பாதுகாப்புக்கே முதல் அச்சுறுத்தல் ஆகும். இது இந்தியாவுக்கு விடப்படும் சவால் என்றே கொள்ளப்படவேண்டும்.

"தெற்காசியத் தென்முனையில் இலங்கையைத் தளமாகக் கொண்டு அமெரிக்கப் படையணிகள் வேகமாக ஊடுருவுவதால் தெற்காசிய மக்களின் தற்சார்புக்கும், பாதுகாப்புக்கும் கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது." - என்று தமிழகத்தில் இருந்து வெளியாகும் 'தினமணி' நாளிதழ் கடந்த சனியன்று எச்சரிக்கை செய்திருந்தது.


1994ஆம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கை விவகாரத்தில் அமெரிக்கத் தலையீடு, ஊடுருவல் எப்படியெல்லாம் நிகழ்ந்திருக்கின்றன என்பதை அந்த ஆசிரியத் தலையங்கம் விலாவாரியாக விளக்கியிருக்கின்றது.

இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ்ப் பகுதிகளுக்குள் அமெரிக்கா எவ்வாறு காலூன்றித் தனது வலையமைப்பைப் பின்னி, தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்கின்றது என்பதை அந்த ஆசிரியத் தலையங்கம் விவரமாக விவரிக்கின்றது.

"நேரு, இந்திரா, பண்டாரநாயக்கா, சிறிமாவோ ஆகிய இரு நாட்டுப் பிரதமர்களும், பாகிஸ்தானுக்கு வெளியே தெற்காசியாவில் வேறெந்த நாட்டிலும் அமெரிக்க ஊடுருவலுக்கு இடமளிக்காமல் பார்த்துக்கொண்டனர். ஆனால், இன்று அமெரிக்கப் படையணி இலங்கையைத் தளமாகக் கொண்டு தெற்காசியத் தென்முனையில் ஊடுருவியுள்ளது."- என்று 'தினமணி' எச்சரித்திருந்தது.

அந்த எச்சரிக்கை நியாயமானது என்பதைத்தான் அமெரிக்க ஆசீர்வாதத்தோடு பாகிஸ்தான் இலங்கையில் உயர் தொழில்நுட்ப 'ரடார்' கருவிகளைப் பொருத்துவதை நோக்க வேண்டும்.

எனவே, இவ்விடயங்கள் இந்தியாவுக்குச் சமர்ப்பணம்.



குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களிடையில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக பருத்தித்துறை ஸ்ரீ சாரதாதேவி சேவாச்சிரமம் நடமாடும் நூல் நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இந்தச் சேவையின்போது பஸ் ஒன்றில் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதையும், பருத்தித்துறை ஸ்ரீ சாரதாதேவி சேவாச்சிரம முதல்வர் சித்ருபானந்த சுவாமிகள், யாழ். இந்துமகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள் குறிப்பிட்ட பஸ்ஸின் முன்பாக கூடிநிற்பதையும் படங் களில் காணலாம். (படங்கள்: பிரபா)

# கீழுழைப்புப் பட்டதாரிகளுக்கு பட்டதாரி நியமனத்தின்கீழ் வேலை

யாழ்ப்பாணம்,மார்ச்15

அரச சேவையில் உள்ள கீழுழைப்புப் பட்டதாரிகளைப் பட்டதாரிகள் நியமனத்தின்கீழ் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதன்படி அரச சேவையில் உள்ள கீழுழைப்புப் பட்டதாரிகள், தற்போது வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள பட்டதாரிகள் நியமனத்துக்கு விண்ணப்பிக்கவேண்டும் என அரசசேவை கீழுழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜி.பற்குணராஜா அறிவித்துள்ளார்.

இதுவிடயமாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசசேவை கீழுழைப்புப் பட்டதாரிகளுக்கு பட்டதாரி நியமனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து அண்மையில் கொழும்பு சென்ற எமது சங்கத்தின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழு, துறைசார் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியது.

இதன் பிரகாரம், தற்போது பயிலுநர்களாகவுள்ள பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கு விண்ணப்பம் கோரப்படும் சமயத்தில், அரசசேவை கீழுழைப்புப் பட்டதாரிகளையும் மேற்படி நியமனத்தில் உள்வாங்கக்கூடியவாறு அமைச்சரவையின் அனுமதிபெற்றுத்தரப்படும் என உறுதி மொழி வழங்கப்பட்டது.

எனவே, வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் தற்போது பொதுச்சேவையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக கோரப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல அரச சேவை கீழுழைப்புப் பட்டதாரிகளும் தவறாதுவிண்ணப்பிக்கவேண்டும்-என்றுஅந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

# திறந்த பல்கலைப் பரீட்சார்த்திகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்

## பரீட்சை ஒத்திவைப்புக் குறித்து அறிவிக்கப்படாததால்

வலி.தெற்கு, மார்ச்15

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெற இருந்த ஆங்கில தேர்ச்சி இறுதிப் பரீட்சைகள் நடைபெறாமையால் பரீட்சை எழுதுவற்கு வந்த பரீட்சார்த்திகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

திறந்த பல்கலைக்கழகத்தின் ஆரம்ப ஆங்கிலத் தேர்ச்சி, அடிப்படை ஆங்கிலத் தேர்ச்சி, தொழில்சார் ஆங்கிலத் தேர்ச்சி ஆகிய பாடங்களுக்கான இறுதிப் பரீட்சைகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்தன.

மேற்படி பரீட்சை எழுத்துவதற்கென வருகை தந்திருந்த சுமார் 60 பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெறாமையால் சில மணிநேரம் காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இதற்கிடையில் - கொழும்பில் நடைபெற்றுவரும் பல்கலைக்கழகப் பகிஷ்கரிப்புக்கள் காரணமாக மேற்படி பரீட்சை இடம்பெறவில்லை எனத் தெரியவருகின்றது.

இருப்பினும், பரீட்சைஎழுதுவதற்குவந்த பரீட்சார்த்திகளுக்கு இதுபற்றி எதுவித தகவலும் அறிவிக்கப்படாமையால் தாம் ஏமாற்றம் அடைந்ததாகவும் -

பரீட்சை எதிர்காலத்தில் எப்போது நடைபெறும் எனத் தமக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றும் - பரீட்சார்த்திகள் கவலை தெரிவித்தனர். (எ-152)

# நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின்சார விஸ்தரிப்புப் பணி ஆரம்பம்

நெடுந்தீவு, மார்ச்15

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின்சார விஸ்தரிப்பு வேலைகள் கடந்த வாரம் முதல் மின்சார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியின் மின்சார விஸ்தரிப்புக்கென 2003ஆம் ஆண்டு பின்தங்கிய கிராமங்களுக்கென பகிர்ந்தளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

தற்போது இதன் முதற்கட்டப் பணியாக மின்சார சபையினால் மின் கம்பங்களை நடுகைசெய்வதற்கான குழிகள் தோண்டப்பட்டு வருவதுடன் மின் கம்பங்களும் நடப்பட்டு வருகின்றன. (எ-112)

# கலிகைச் சந்திக் குடியிருப்புக்குள் சிப்பாய்கள் எவருமே நுழையவில்லை

## படைத்தரப்பினரின் விளக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்15

'இரவில் தகாத செயல் புரியும் நோக்குடன் சிப் பாய்கள் குடியிருப்பினுள் நுழைந்ததால் கரவெட்டியில் பெரும் களேபரம்' என்ற தலைப்பிட்டு கடந்த 12ஆம் திகதி உதயனின் முன்பக்கத்தில் வெளியாகி இருந்த செய்தி குறித்து யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகம் விளக்கம் அளித்திருக்கின்றது.

அந்தச் செய்தியில் குறிப்பிட்டது போல சிப்பாய்கள் எவரும் மக்கள் குடியிருப்பினுள் பிரவேசிக்கவில்லை என்றும் தேவையற்ற விதத்தில் படைச்சிப்பாய்கள் மீது சந்தேகம் கொள்வது முற்றிலும் தவறானது என்றும் படைத் தலைமையகம் அதன் விளக்கத்தில் தெரிவித்திருக்கின்றது.

கரவெட்டிச் சம்பவம் தொடர்பாக படைத்தரப்பு அளித்துள்ள விளக்கம் வருமாறு:-

பருத்தித்துறை கலிகை இராணுவ முகாமுக்கு சுமார் 200 மீற்றர் தூரத்திலுள்ள யார்க்கரு கிராமத்தில் அமைந்துள்ள வீட்டிற்குள் அதிகாலை சுமார் ஒரு மணியளவில்நுழைந்தநபர்வீட்டுக்காரரிடம்கிணற்று வாளியொன்றைத் தருமாறு கேட்டுள்ளதுடன், இந்த நபர் கேட்டுக்கொண்டதற்கமைய வீட்டுக்காரர் வீட்டுக்குள் சென்று மீண்டும் திரும்பி வரும்போது அந்தநபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இதனால், வீட்டின் உரிமையாளர் கலிகை இராணுவ முகாமுக்குச் சென்று இந்த முகாம்வழியாக நபர் ஒருவர் தப்பி வந்ததாக இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியிடம் தெரிவித்துள்ளார். அவ்வாறு இங்கு யாரும் வரவில்லை என்றும், இந்த விடயத்தை அருகிலுள்ள பொலீஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்யும்படியும் இராணுவ அதிகாரி வீட்டுக்காரருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். பின்பு அந்த இராணுவ அதிகாரி காலை 9 மணிக்கு பொலீஸ் நிலையத்திற்குச் சென்று இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிவித்துள்ளதுடன், முகாமிற்கு வந்து மேற்படி சம்பவ பிரச்சினையை தீர்த்துக் கொள்ளும்படி வீட்டு உரிமையாளரிடமும் அதிகாரி தெரிவித்துள்ளார். ஆனால், வீட்டுக்காரர் முகாமிற்குச் செல்லவில்லை. அப்பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 15 பேர் ஒன்றுகூடி கலிகைச் சந்தியில் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர். ஏதாவது சந்தேகம் இருந்தால் முகாமிற்கு வந்து பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும்படி அந்தச் சந்தர்ப்பத்தில் வீதியில் பயணம் செய்துகொண்டிருந்த இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். ஆனாலும், அவர்கள் தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபட்டார்கள். பின்பு வீட்டுக்காரரின் சந்தேகத்தைத் தீர்க்க முகாமில் அணிவகுப்பு நடத்தப்பட்டபோதிலும், வீட்டுக்காரருக்கு யாரையும் அடையாளம்காட்ட முடியவில்லை. தேவையற்ற வகையில், இராணுவச் சிப்பாய் மீது சந்தேகம் கொள்வது கவலையைத் தரும் செயல் எனவும் இந்த அணிவகுப்பின் போது இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

மேற்படி செய்தியின் மூலம் பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையே காணப்படும் நல்லுறவு சீர்குலைக்கப்படுவதோடு, தங்களின் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த செய்தி முற்றிலும் பொய்யானதாகும். இவ்வாறு உண்மைக்கு மாறாகச் செய்திகளைத்தங்களின் பத்திரிகையில் பிரசுரிப்பதால் உண்மையெது பொய்யெது என பொதுமக்களுக்கு விளங்கிக்கொள்ள முடியாமல்போய்விடும். மேலும், இராணுவத்தினர் தொடர்பான செய்திகளைப் பிரசுரிக்கும் முன், உண்மை எதுவென உறுதிப்படுத்திக்கொண்டபிறகு செய்திகளைப் பிரசுரிக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

## உதயவாக்கு

வயது செல்லச்செல்லத் தோல் சுருங்குகின்றது; ஆனால், மகிழ்ச்சியை விட்டு விட்டால் வாழ்வே சுருங்கிவிடும்

- சாமுவல் உல்மன்

## நாளை

பங்குனி 03
புதன்கிழமை
16.03.2005
திதி : ஷஷ்டி
பிற்பகல் 01.21 வரை
நட்சத்திரம் : ரோகிணி
முழுவதும்
ஷஷ்டி விரதம்
சுபநேரம் : 04.49 - 06.19
ராகுகாலம் : 12.19 - 01.49
(யாவும் பழைய நேரப்படி)

# மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம் (வ.து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**லிகிதர் பதவி எண் 302:16 (165/88 இன்படி)**

தகைமைகள்:

க.பொ.த. (சாதாரண) தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம், சிங்களம்/ தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களில் சித்தியும், கணனித் தகைமையும் அறிவும் தேவையாகும்.

**லிகிதர் பதவி எண் 302:14 (165/88இன்படி)**

தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 15ஆவது சம்பளத்திட்டத்தில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது 16 ஆவது சம்பளத்திட்டத்தில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ) க.பொ.த. (சாதாரண) தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம், சிங்களம்/தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச்சங்கமொன்றில்லிகிதராக ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவமும் , கணனித் தகைமையும் அறிவும் தேவையாகும்.

**கிளை முகாமையாளர் பதவி எண் 208:16(165/88இன்படி)**

தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 17ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண) தரப்பத்திரம்/க.பொத.த. (சாதாரண) தரத்தில் 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம், சிங்களம்/தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களில் சித்தி.

**கிளை முகாமையாளர் பதவி எண் 208:14 (165/88இன்படி)**

தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 15ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளரின் 16ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண) தரப்பத்திரம்/க.பொ.த. (சாதாரண) தரத்தில் 02 அமர்வுகளுக்கு மேற் படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம், சிங்களம்/தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களில் சித்தி.

**லொறிச்சாரதி பதவி எண் 312:14 (165/88இன்படி)**

தகைமைகள்:

5ஆம் வகுப்பு தராதரப்பத்திரமும் சாரதிக்கான அனுமதிப்பத்திரத்துடன் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தில் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும். வயது எல்லை 25 தொடக்கம் 50 வரையும் விண்ணப்பங்களை "தலைவர், மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி 30.03.2005.

தலைவர்,
மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்,
மானிப்பாய்.

(C/41488)(42-21-11-34)


## தொலைபேசி இணைப்புக்குக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்15

பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத் திற்குத் தொலைபேசி இணைப்பைப் பெற்றுத் தருமாறு யாழ். மாவட்ட அரச அதிபரிடம் வலிகாமம் தென் மேற்குப் பிரதேசசபை கோரியுள்ளது.

இது தொடர்பாக மேற்படி பிரதேசசபை நிர்வாகம் அரச அதிபருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது. (எ-203)

## பெரும்பாக அலுவலரின் அறிவிப்பு

சங்கானை,மார்ச்15

விவசாயத்தைப் பாதிக்காத வகையில அனைவரும் கால்நடை களைக் கட்டி வளர்க்க வேண்டும் என்று காரைநகர், உடுவில், தொல்புரம் கமநலசேவைகள் நிலையங்களுக்குப் பொறுப்பான பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சோதிநாதன் அறிவித்துள்ளார்.

மேற்படி கமநல சேவைப் பிரிவிற்குள் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள பிடிக்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்களிடம் இருந்து குற்றப்பணம் அறவிடப்படும்.

குற்றப்பணம் செலுத்தத்தவறுபவர்களின் கால்நடைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் - என்று அவர் மேலும தெரிவித்தார்.

(எ-203-29)

## கல்விச்சாலைக் காட்சிகள்




சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கை புவனேந்திரன் பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்களின் கலைவிழாவில் மாணவிகள் இன்னிசை விருந்தளிப்பதைக் காணலாம்.

*(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)*



ஜெயபுரம் அ.த.க. பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றபோது மாணவர்கள் வினோத உடைப் போட்டியில் பங்குபற்றிய போது எடுக்கப்பட்ட படம்.

*(எ)*



கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் மேற்கொண்ட மரநடுகையின் போது, புற்றளை மகா வித்தியாலயத்தில் அதிபர் திருமதி சகுந்தலா இந்திரராஜா மரக்கன்று ஒன்றை நடுவதைப் படத்தில் காணலாம். அருகில் கல்வியியற் கல்லூரி மாணவர்களும் வித்தியாலய மாணவர்களும் காணப்படுகின்றனர்.

*(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*



நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டியைத் தீவகக் கல்வி வலயத்தின் நிர்வாக உத்தியோகத்தர் செ.மெற்றாஸ்மயில் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் அதிபர் சாரதா கிருஷ்ணதாஸ், விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் அசோகன் மற்றும் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.

*(படம்: நல்லூர்ச் செய்தியாளர்)*


## கண்ணீர் அஞ்சலி



சங்கீத இசைக் கருவிகள் திருத்துநராக இசையுலகுக்குப் பணியாற்றி வந்த எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான

**செல்லத்துரை தனேந்திரகுமார்**

(ரங்கன்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

54. விபுலானந்தர் வீதி.
கொழும்புத்துறை (43086)(21-11-34)

கீதவாஹினி
இசைக் கல்லூரிச் சமூகத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்

தீவக அரிமாக்கழக ஆயுட்கால உறுப்பினரும், மாவட்ட நீதிபதி மல்லாகம் லயன் இளங்கோவன் சறோஜினிதேவியினது அன்புத் தாயாரும், தீவகம் வடக்கு பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் திரு.இளங்கோவன் அவர்களது மாமியாருமாகிய

**அமரர் நமசிவாயம் பொன்னம்மா**

11.03.2005 இல் இறைபதம் எய்தியமையையிட்டு ஆறாத் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் தமது துயரத்தை பகிர்ந்து கொள்கிறார்கள்.

(43087)(21-11-34)

தீவக அரிமாக்கழகம்
ஊர்காவற்றுறை.

## மரண அறிவித்தல்

**அமலராயர் றொனி டிக்ஷன்**

(றொபின்சன்)



குருநகர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அமலராயர் றொனி டிக்ஷன் (றொபின்சன்) 22.02.2005 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் அமலராயர்- பேபிபரினா தம்பதிகளின் செல்வப் புதல்வனும், மேரி நிலாந்தினி, யூலியஸ் சாள்ஸ், ஷரினா சாளினி, மெரி அனிற்றா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜோன் றெஜினியஸின் மைத்துனரும் ஜெனிபரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-03-2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் குருநகரிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*8,தண்ணீர்தாங்கி வீதி,*
*குருநகர்,*
*யாழ்ப்பாணம்.* (43094)(46-21-11-34)

தகவல்:
இ.அமலராயர் (தந்தை)

## தவறவிடப்பட்டுள்ளது

கடந்த 21.02.2005 அன்று மானிப்பாய் - உடுவில் வீதிக்கும் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கிக்கும் இடையில் ஐந்து பவுண் தங்க வளையல்கள் இரண்டு சோடி தவறவிடப் பட்டுவிட்டன. இவை இன்னொருவருக்குச் சொந்தமானவை என்பதால் நாம் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கியுள்ளோம். தயவு செய்து இவற்றைக் கண்டெடுத்தவர்கள் சி.கிருபாகரன் (சுரேஷ்) 68, உடுவில் வீதி, மானிப்பாய். என்னும் முகவரியோடு அல்லது 077 -6571171 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (43088)(21-11-34)

## WALK IN INTERVIEW

Applications are invited from qualified and experienced persons to fill the following vacancies.

- **Lecturers Visiting Lecturers**
The ideal candidate should be a B.Sc. degree holder in Computer Science from any University in Sri Lanka or abroad or any other Professional body. Fluency in English and ability to correspond in this language is an advantage.

- **Instructors and Assistants**
Undergraduates who are holding diploma certificates in computer applications from recognized Institutions.

Those who interested are requested to call over at this office with their CVs and Originals of the relevant Certificates on 20th March 2005 from 10.00 a.m. - 1.00 p.m.

(C/41477) (24-11-34-21)

**DIRECTOR.**

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
**100, CLOCK TOWER ROAD, JAFFNA.**

# ரயில், தபால் சேவைகள் இன்று ஸ்தம்பிக்கும் சாத்தியம்

கொழும்பு,மார்ச்15

நாட்டின் தபால் மற்றும் ரயில் சேவைகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் ஸ்தம்பித மடையும் நிலை உருவாகியிருக்கிறது.

அஞ்சல், தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கமும், ரயில்வே சாரதிமார் சங்கமும் தமது கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்குவதே இதற்குக் காரண மாகும்.

பல வருடகாலம் தபால் திணைக்களத் தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப் பதற்குப் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்திய போதும் அவை பயனற்றுப் போயுள்ளமை யாலும், இதனால், உத்தியோகத்தர்கள் மத்தி யில் கடுமையான அதிருப்தி நிலவுவதாலும், இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தமது நிறைவேற்றுக்குழு தீர் மானித்ததாக அஞ்சல், தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கம் அறிவித்தது.

இதன்படி இன்று நள்ளிரவு தொடக்கம் இரண்டு நாள்களுக்கு சுகவீன விடுமுறைப் போராட்டத்தை அடையாள தொழிற்சங்க நட வடிக்கையாக முன்னெடுப்பதற்கு அஞ்சல், தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

### ரயில்வே வேலைநிறுத்தம்

அதேவேளை, இரு பிரதான கோரிக்கை களை முன்வைத்து இன்றுமுதல் வேலைநிறுத்த மொன்றை ஆரம்பிப்பதற்கு ரயில்வே லொக் கோமோட்டிவ் சாரதிகள் சங்கம் தீர்மானித்துள் ளது.

ரயில்வே சாரதிகள் பயிற்றுவிப்புச் செயற் பாடு மற்றும் ரயில் சாரதிகள் ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளில் பெரும் குறைபாடுகள் உள் ளன என்றும் இந்தப் பயிற்றுவிப்பு நடவடிக்கை மற்றும் ஆள்சேர்ப்புக்கான பரீட்சை முறை களைச் சீர்ப்படுத்தும்வரை இந்த வேலைநிறுத் தம் தொடருமென்றும் லொக்கோமோட்டிவ் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் கொந்தசிங்க தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சர், ரயில்வே பொது முகாமையாளர் ஆகியோருக்கும் இந்த வேலை நிறுத்தம் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (க-3)

# மீள்குடியமர்வு கொடுப்பனவு

தென்மராட்சி,மார்ச்15

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடிய மர்ந்து இதுவரை உடனடி மீள்குடியமர்வுக் கொடுப்பனவு பெற்றுக்கொள்ளாத குடும்பங் களுக்கு வங்கிகளில் 25ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

யாழ். செயலக புனர்வாழ்வு பிரிவினரால் இக் கொடுப்பனவுக்கான காசோலைகள் கடந்த வாரம் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டதையடுத்து இக் கொடுப்பனவு வங்கிகளில் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# ஜெய்ப்பூர் நிறுவன பயிற்சிமுகாம்

வலி.மேற்கு,மார்ச்15

வலி.மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த வலு விழந்தவர்களுக்கு ஜெய்ப்பூர் நிறுவனத்தின ரால் இலவச பயிற்சிமுகாம் ஒன்று நடத்தப்பட வுள்ளது.

இம்மாதம் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழக மண்டபத்தில் இந்தப் பயிற்சிமுகாம் நடத்தப்படும். (எ-175)

# ஜே.வி.பி. தலைவர்களின் சொத்துக் குறித்து விசாரணை

## உடனடியாக நடத்த ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,மார்ச்15

ஜே.வி.பியின் உயர்மட்டத் தலைவர்கள் சேர்த்து வைத்திருக்கும் சொத்துக்கள் பற்றி பூரண விசாரணைகளை மேற்கொள்ளும்படி ஜனாதி பதி இரகசியப் பொலீஸாருக்கு உத்தரவிட்டிருக் கிறார். இது ஜே.வி.பியுடன் அவர் கொண்டிருக் கும் உச்சக்கட்ட முரண்பாட்டின் வெளிப்பாடா கும்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த ராஜிதசேனா ரத்ன எம்.பி.மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வா டெடி கமவில் கட்டியுள்ள ஹோட்டல் விடயம் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவின் மனைவியின் பெயரிலுள்ள சொத்துகள் நந்தன குணதிலக்க வின் சொத்து விவரம் போன்றவை குறித்து உடனடியாக விசாரணை நடத்தும்படி குற்றப்புல னாய்வுப் பிரிவுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள் ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதியின் இந்தப்போக்கு ஜே.வி.பியின ரைக் கொதிப்படைய வைத்துள்ளது.

கூட்டுச் சேர்ந்து கொள்ளையடிப்பதற்கு ஜனாதிபதி மிகவும் விருப்பம் கொண்டவர். அதே வேளை, கூட்டாக இருந்து கொண்டு தனித்துக் கொள்ளையிட்டால் அவர் ஒருபோதும் அதனை பொறுக்கமாட்டார்.

ஒன்றுமேஇல்லாத ஜே.வி.பியினருக்கு திடீ ரெனச் சொத்துச்சேர்ந்தது எப்படி?

ஐ.தே.கவின் மேதினம் இந்த அரசை வெளி யேற்றுவதற்கான கோரிக்கையை முன்வைக் கும் மேதினமாவே அமையும் - என்றார் ராஜித சேனாரத்ன. (எ-க-13-190)

# யாழ். மாவட்ட கலாசார சபை நிறுவ செயலகத்தில் இன்று கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ். மாவட்டத்திற்கென கலாசாரசபை ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இந்தச் சபையை அமைத்தல் தொடர்பான விசேட கூட்டம் ஒன்று இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். செயல கத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர், உதவி அரச அதிபர் பிரிவு மட்டத்திலான கலாசாரக் குழுக்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் திருமறைக்கலாமன்றம், யாழ். இலக்கிய வட்டம், பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகம் போன்ற அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதி கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

எனவே, மேற்படி அமைப்புக்களைச் சேர்ந்த தலா இரண்டு பிரதிநிதிகளை இக்கூட்டத்தில் தவறாது சமுகமளிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி சம் பந்தப்பட்ட பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரச அதிபர்களைக் கேட்டுள்ளார். (எ-203)

# சுனாமி பாதித்தோரின் விவரம் 'சீடா' உதவியுடன் சேகரிப்பு

வட்டுக்கோட்டை,மார்ச்15

சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப் பட்ட குடும்பங்களின் விவரம், காணாமற் போன வர்களின் விவரம் ஆகியவற்றை காணாமற் போனவர்களின் பெற்றோர் குடும்ப அங்கத் தினருக்கான அமைப்பு சேகரித்து வருகின்றது.

கனேடிய அரசு மற்றும் 'சீடா' நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்தத் தக வல் சேகரிப்பு இடம்பெற்று வருகின்றது.

பாதிப்புக்குள்ளானவர்களது உரிமைகளைப் பேணுவதற்காகவும் வெளிநாட்டு நிறுவனங்க ளின் தேவைகளுக்காகவும் இந்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்று காணாமற் போனோ ரின் பெற்றோர் குடும்ப அங்கத்தினருக்கான அமைப்பின் யாழ்மாவட்ட வதிவிட பிரதிநிதி எஸ். மோகன் தெரிவித்தார். (எ-161-203)

# மானிப்பாய் தெணிவெளிவயலில் சட்டவிரோத மணல் அகழ்வு

வலி.தெற்கு,மார்ச்15

மானிப்பாய்ப் பிரதேச சபைப் பிரிவில் உள்ள தெணிவெளி வயல்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் முறைப்பாடு தெரிவித்துள் ளனர். தெணிவெளி வயல் திடல்களில் உள்ள மணலை இரவு நேரங்களில் டிராக்டர்கள் மூலம் அள்ளிச்செல்பவர்கள் சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வயல்களினூடாகக் கொண்டு செல்கின்றனர் என்றும் - இதனால் சிறுதானியப் பயிர்கள் அழிவடை கின்றன என்றும் - விவசாயிகள் விசனம் தெரி வித்துள்ளனர்.

தினமும் 15தொடக்கம் 20 வரையான டிராக்டர் மணல் இப்பகுதியிலிருந்து அள்ளிச் செல்லப்படுவதாகவும் - இந்தச்சட்ட விரோத செயலைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கை களை சம்பந்தப்பட்டவர்கள் உடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் - அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-152-203)








சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தும்பளை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளைத் துப்புரவு செய்யும் பணிகளில் இன்ரறக்ட் கழக மாணவர்கள் ஈடுபட்டிருப் பதை முதலிரு படங்களிலும், அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சேகரித்த பொருள் களை வழங்குவதை கீழே உள்ள படத்திலும் காணலாம். (3-203)

# பெரியோரை மதித்து வாழ்வோம்

"பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது. உன் தந்தையையும் தாயையும் மதித்து நட இதனால் நீ நலம் பெறுவாய் மண்ணுலகில் நீடூழி வாழ்வாய்" (எபே, 6:1-3)

**தவக்காலச் சிந்தனை**

கீழ்ப்படிவு என்பது சமுதாயத்தின் பலமட்டங்களிலும் இன்று கேள்விக் குறியாகவும், பெரும் சவாலாகவும் முன் நிற்கிறது. பெற்றோரை அலட் சியம் செய்தல், ஆசிரியர், பெரியோரின் அறிவுரைகளை உதாசீனம் செய்தல், தொழில் ஸ்தாபனங்களில் அதிகாரிகளுக்குப் பணிவின்மை, சமூகத்தில் மூத்தோரின் பட்டறிவை உள்வாங்காது ஏளனம்செய்தல் என்பனவே பல சமூகச் சீர்கேடுகளுக்கும் சமுதாய பிறழ்வுகளுக் கும் காரணிகளாய் உள்ளன.

இவ்வாறான பெரியோர்கள் பல அனுபவங்களையும், சவால்களையும் தாண்டி வந்தவர்கள். இவர்களின் புத்திமதிகள் இளைய சமுதாயத்தின் வாழ்வை நெறிப்படுத்தி, வளப்படுத்தக் கூடியவை.

சினிமா மற்றும் ஊடகங்கள் மக்களை ஈர்த்து, திசைதிருப்பி உள்ளங்களைக் கடி னப்படுத்துகின்றன. பெற்றோர், உறவுகள் மீதான பாசமும் மதிப்பும் அருகிப்போகின்றன.

**முப்பத்தைந்தாம் நாள்**

சினிமாக் கலாசாரம் வாழ்வாக்கப்படுகிறது. இந்த நிலை எதிர்கால சந்ததிக்கு ஆரோக்கிய மானதல்ல.

பல வயோதிபப் பெற்றோர் கைவிடப்பட்ட நிலையில் பாசத்திற்காக, ஆறுதலுக்காக எவரும் இன்றித் தனிமையில் வாடுகின்றனர். இவர்கள் இல்லாமல் இளைய தலைமுறை எவ்வாறு உருவாகியது; வளமாகியது. அவர்களின் தியாகம் அளப்பரியது.

இயேசு தன் முப்பது வயது மட்டும் பெற்றோருடன் பணிவுடன், அமைதிவாழ்வு வாழ்ந்து வந்தார். கானாவூரில் தனது தாயின் வேண்டுகோளை ஏற்றுத் தண்ணீரை ரசமாக மாற்றினார்.

குடும்ப அமைப்பின் கட்டுமான முறைகளை கற்றுத் தந்த யேசுவின் பாதையில் இன்றைய இளையோர் பயணித்தால் வீடும் நாடும் நலம்பெறும். பெரியோர், பெற்றோர், அறிஞர்களுக்கு மதிப்பளிப்போம். நாமும் மதிப்புப் பெறுவோம். அவர்களின் ஆசி எம்மை நீடூழி வாழவைக்கும்.

உங்களுடைய முந்தின நடத்தையை மாற்றி தீய நாட்டங்களால் ஏமாந்து அழி வுறும் பழைய மனிதருக்குரிய இயல்பைக் களைந்து விடுங்கள். உங்கள் மனப்பாங்கு புதிப்பிக்கப்படவேண்டும். *(எபே, 4:22:23)*

எஸ்.யேசுதாஸ், *கொழும்புத்துறை*

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02 06 1963

மறைவு 26 03 2004

திருமதி
## நவேந்திரன் செல்வராணி
திதி: 15.03.2005

கரும்பாக எம்முறவு கைப்பிடித்த நாள் முதலாய்
கையதனில் தேன்போன்று காலமெலாம் இனித்ததுவே
விருப்போடு நாமிணைந்து பெற்றிட்ட சேயிரண்டு
வளர்ந்தோங்க வேண்டியே வணங்கி நாம் வந்தோமே
உருகாவுனைப் பீடித்த கொடியநோய் சூழ்ந்துவ ர
இரு பிள்ளை என்னுடனே தவித்திருக்க மறைந்தாயோ?
நெருப்பினிலே கலந்தின்று ஆண்டொன்று ஆனாலும்
நினைவுமோ நெஞ்சினிலே நாளுமே மாறாது

தும்பளை கிழக்கு, பருத்தித்துறை.
கணவன், பிள்ளைகள்.
(43027)(50-45-18)

# வட்டுக்கோட்டை தபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் இல்லை

வலி.மேற்கு,மார்ச்15

வட்டுக்கோட்டைத் தபால் அலுவலகம் பல வருடங்களாக நிரந்தரக் கட்டடம் இன்றித் தனியார் வீடுகளில் இயங்கி வருகின்றது. அதற்குப் போதிய வசதிகள் எதுவுமில்லை.

இதனால், ஊழியர்களும், பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பல வருட காலமாக முதலாம் தரத் தபாலகமாக இத்தபாலகம் இயங்கி வருகின்ற போதிலும் அதற்கு இதுவரை ஒரு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படவில்லை.

எனவே, உரியவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து இத்தபாலகத்திற்கான ஒரு கட்டடத்தை அமைக்க முன்வரவேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர். (த-203-175)

# கடற்படைத் தளபதிகள் சிலருக்கு இடமாற்றம்

கொழும்பு,மார்ச்15

இலங்கைக் கடற்படையின் முக்கிய தளபதிகள் சிலருக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையின் மேற்குக் கட்டளையிடும் தளபதியாகக் கடமையாற்றிய றியர் அடமிரல் வசந்த கரன்னகொட வடமத்திய கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். வடமத்திய கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றிய றியர் அட்மிரல் சரத் ரட்னகீர்த்தி மேற்குக் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல், திருகோணமலை கடற்படை கட்டளையிடும் தளபதியாக றியர் அட்மிரல் சரத் வீரசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

கடற்படைத் தளபதி தயா சந்தகிரியின் பணிப்புரையின் பேரில் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. (எ-க)

# தரம் 7 மாணவர்களுக்கான பாடநூல்கள் கிடைக்கவில்லை

வலி.தெற்கு,மார்ச்15

பாடசாலை தவணை ஆரம்பமாகி இரண்டு மாதம் கழிந்து விட்ட நிலையிலும் மாணவர்களுக்கான சில இலவச பாடநூல்கள் இதுவரை வழங்கப்படாமையால் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் கற்றல் - கற்பித்தலில் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வலிகாமம் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கு புதிய கல்வித் திட்டத்துக்கமைவான 7ஆம் தர புவியியல், வரலாறு, குடியுரிமைக் கல்வி மற்றும் தமிழ்பாடநூல் என்பனவும் 5ஆம் தரத்துக்குரிய ஆங்கில பாடசெயல்நூலும் இதுவரை கிடைக்கவில்லை.

புதிய கல்வித் திட்டத்துக்கான பாடங்களை புவியியல், வரலாறு, குடியுரிமைக் கல்வி போன்ற பாடங்களுக்குரிய பாடத்திட்டங்கள் கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும் இவை பாடசாலைகளுக்குப் போதுமான அளவில் வழங்கப்படவில்லை.

பாடத்திட்டங்களும் இன்றி, பாடநூல்களும் இன்றி ஆசிரியர்கள் பாடங்களை கற்பிப்பதில் மிகுந்த சிரமப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(த-152)

உ

## சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
## வருடாந்தப் பொங்கல் விழா

விளக்கு வைத்தல்: பங்குனி 2ஆம் நாள் 15.03.2005 செவ்வாய்க்கிழமை

முதலாம் பொங்கல் பங்குனி 9 ஆம் நாள் 22.03.2005 செவ்வாய்க்கிழமை,

இரண்டாம் பொங்கல் பங்குனி 16ஆம் நாள் 29.03.2005 செவ்வாய்க்கிழமை வழமைபோல் நடைபெறும்.

குறிப்பு:
பொங்கல் விழாவில் வியாபாரம் செய்ய விரும்பும் வியாபாரிகள் முன்கூட்டியே தமது இடங்களைப் பதிவு செய்துகொள்ளவும். 19.03.2005 சனி, 20.03.2005 ஞாயிறு ஆகிய நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் 12.00மணி வரை ஆலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.


சுழிபுரம்
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
பரிபாலன சபை.

(43050) (39-16-18-42)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09-11-1938

மறைவு 08-03-2003



## வேலுப்பிள்ளை சின்னத்துரை J.P.
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்)
திதி: வளர்பிறை பஞ்சமி
15-03-2005

அன்பின் இருப்பிடமாய் அறிவின் பொக்கிஷமாய்
இன்பமுடன் எமை வளர்த்து- பண்புடனே
பல கலைகள் தானூட்டிசிறப்புடனே
நாம் வாழச் சிந்தனைகள் பல நல்கி
சீலமுடன் வாழ்ந்திருந்தீர் காலமெல்லாம்
நாம் மறவோம் ஈசனுடன் இணைந்திருக்க
வேண்டுகிறோம் எந்நாளும் நாம்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# காரைநகரில் இன்று நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மார்ச்15

காரைநகர் பொதுச சுகாதார பரிசோதகர் பிரிவிற் குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இன்று தடுப்பூசிகள் போடப்படவுள்ளன.

காலை 9 மணிக்கு கல்வன் தாழ்வு சனசமூக நிலையத்திலும்- முற்பகல் 11 மணிக்கு வாரிவளவு பிள்ளையார் கோயிலடியிலும் -

முற்பகல் ஒரு மணிக்கு மருதபுரம் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசிகள் போடப்படவுள்ளன.

வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசிகளைப் போட்டுப் பயனடையுமாறு காரைநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ச.பரமேஸ்வரன் கேட்டுள்ளார். (த-204)


# கூட்டம்

வலி.தெற்கு,மார்ச்15

வலி.தெற்கு அரச சேவை ஓய்வூதியர் சங்க நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிககு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(3-152)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



மண்ணில் 20.09.1944

விண்ணில் 13.02.2005

## அமரர் நடராசா நற்குணசிங்கம்
(சிவலிங்கம் - பத்தர்)
திதி: 15.03.2005

மாதமொன்று அவசரமாய் கழிந்த போதும்
ஆறிடுமோ ஆழ்துயர் எம் உள்ளத்தில்
திரும்பும் இடமெல்லாம் மாண்டு விட்டீர்கள்
என்று மறக்கத்தான் தோன்றிடுமா?
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு
நீங்கவில்லை
எத்தனை பந்தங்கள் இருந்தாலும் "அப்பா"
என்றழைக்கும் உங்கள் உறவிற்கு
நிகரில்லை
எம்மை வளர்த்து ஆளாக்கிய உங்களின்
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (15.03.2005) செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு
அச்சுவேலி.

(43060)(39-161-18-42)

- மனைவி,
பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
## வேலன் பிள்ளையான்
(ஓய்வூதியர், இலங்கை புகையிரத பகுதி மேற்பார்வையாளர்)

மலர்வு 20.08.1925

உதிர்வு 13.02.2005

திதி:
மாசிமாதம் பூர்வபக்க பஞ்சமி

அன்புடன் ஆறுதல் எமக்களித்து
துணையாய் இருந்த ஐயாவே!
நீங்களும் மறைந்து மாதம் ஒன்றானதோ?
ஆறுதல் சொல்ல யாருமே இல்லையையா!
பாசமுடன் வளர்த்து பாரினில் புகழ் வைத்தாய்!
காண்போமா இனி இங்கு உலகினில்?

உங்கள் ஆத்மா சாந்தி பெற மருதடி விநாயகனை வேண்டுகின்றோம்.

எமது அன்புக்குரிய குடும்பத் தலைவர் எங்களை விட்டுப் பிரிந்த செய்திகேட்டு உடன் வீட்டிற்குவந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் எல்லா வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்து நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இன்று (15.03.2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் குடும்பத்தினர்
சார்பில்:
பி.நாகையா குடும்பம்,
(பிரசன்னா என்ரபிறைசஸ் வத்தளை),
பி.குணரத்தினம் குடும்பம்,
(பாதுகாப்பு உத்தியோகத்தர் யா/மாநகரசபை),
பி.செல்வநாயகம் குடும்பம்,
(லங்கா சிமெந்து நிறுவனம்).


"சரஸ்வதி வாசம்"
மாசியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(43001)(39-18-16-42)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி
## அமரர் பொன்னன் செல்வநாயகம்

தோற்றம் 1951.02.22

மறைவு 2002.03.22



ஆண்டுகள் மூன்று மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் மட்டும்
மறையவே மறையாது
அன்போடு பேசி, பண்போடு
வாழ்ந்த உங்களது
பாசமுகம் எப்போதும் எங்கள்
கண்முன்னே தெரிகிறது
உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

மனைவி, பிள்ளைகள், சகோதர,
சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள்,
பெறாமக்கள், மருமக்கள், மாமி.

(43060)(39-16-18-42)

# நீதித்துறை பாராமுகமாகவே செயற்படுகின்றது தமிழர்கள் அதன்மீது நம்பிக்கை இழந்துள்ளனர்

## நாடாளுமன்றில் கஜேந்திரன் எம்.பி.

பயங்கரவாதத் தடைச்சட்டமும், அவசரகால தடைச்சட்டமும் தமிழர்களை வாட்டி வதைத்த போது நீதித்துறை பாராமுகமாகவே செயற்பட்டது. தமிழர்கள் இலங்கை நீதித்துறை மேல் நம்பிக்கை இழந்துவிட்டனர்.

- இப்படிக் கூறினார் யாழ்.மாவட்ட எம்.பி. எஸ். கஜேந்திரன்.

நாடாளுமன்றில் கடந்த வியாழக்கிழமை அரசமைப்பின் 18 ஆவது திருத்தம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கஜேந்திரன் தொடர்ந்து இதுபற்றிக் கூறியதாவது:-

வடக்கில் 99 வீதமான காவல்துறையினர் சிங்களவர்களாக இருக்கின்றனர். தமிழர்களுக்கு இவர்களின் மொழி புரியாது. இவர்களின் செயற்பாடுகள் தமிழுக்கு விரோதமானவையாகும் இவர்களிடம் தமிழர்கள் எப்படி நீதியையும், நியாயத்தையும் எதிர்பார்க்க முடியும்?

கொக்கட்டிச்சோலை, வந்தாறுமூலை, புதுக்குடியிருப்பு, நவாலி, நாகர்கோயில், சத்துருக்கொண்டான். உரும்பனை, மடுமாதா கோயில் போன்ற இடங்களில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது இந்த நீதித்துறை எங்கேயிருந்தது? தமிழர்களுக்கு ஒரு நீதி, சிங்களவாகளுக்கு ஒரு நீதி என்ற அடிப்படையிலேயே இந்த நாட்டின் நீதித்துறை இருந்துவருகிறது. இரத்தக்கறை பதிந்த இந்த நீதித்துறையை நாம் நம்புவதற்குத் தயாரிலலை. தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தால் அவர்கள் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டனர். உண்மையைச் சுட்டிக்காட்டிய உலக வங்கியின பிரதிநிதியை 'வெள்ளைப்புலி' என்கின்றனர். ஒட்டுமொத்தமாகத் தமிழர்களைக் கொன்றொழிக்கவே இலங்கை நீதித்துறை செயற்பட்டு வருகிறது. ஐ.நா.செயலர் கொபி அனான் இலங்கைக்கு விஜயம் செய்தபோது அவரைப் பாதிக்கப்பட்ட தமிழர்களையும், பாதிக்கப்பட்ட பகுதிகளையும் பார்வையிடத் தென்பகுதிப் பேரினவாத சக்திகள் இடம்கொடுக்கவில்லை. மறுபுறம் இந்தத் திருத்தச் சட்டமூலம் ஒற்றையாட்சியை மேலும் வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படுகிறது.

தமிழர்கள் தமது பிரதேசத்தில் தனியான நீதித்துறையொன்றை உருவாக்கியுள்ளனர். அது தமிழரின் தன்னாட்சியைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. எமக்கென்று எப்போது தனிச்சட்டம் உருவாக்க முடிகிறதோ அதுவே எமது தனித்துவத்தையும், தன்னாட்சியையும் உறுதிப்படுத்தும். யாழ்ப்பாணத்தில் படையினர் தமிழர்களை பாடையில் ஏற்றும் வேலைகளைச் செய்துவருகின்றனர். விரைவில் தமிழர்கள் கிளர்ந்தெழுந்து அவர்களைப் பாடையில் ஏற்றுவார்கள். அதற்கு முன்னர் அங்கிருக்கும் ஆக்கிரமிப்புப் படை வாபஸ் பெறவேண்டும் -. என்றார்.

## இரத்தக் கறையுடன் வந்துள்ளோர் ஜனநாயகம் குறித்துப் பேசுவதா?

### ஜே.வி.பியினர் குறித்து மகேஸ்வரன் சீற்றம்

மக்களைக் கொன்றொழித்துவிட்டு இரத்தக கறைகளுடன் நாடாளுமன்றுக்கு வந்த ஜே.வி.பியினருக்கு ஜனநாயகம் பற்றிக் கதைக்கும் அருகதையில்லை. எனது கைகள் இரத்தக்கறை படியாதவை - என்கிறார் மகேஸ்வரன் எம்.பி.

நாடாளுமன்றில் கடந்த வியாழக்கிழமை வாய் மூல விடைகளுக்கான வினாவின்போது அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் அமைச்சுக்கு கீழ் கொழும்பு கிரிமண்டல மாவத்தையில் உள்ள பத்து ஏக்கர் காணி விற்கப்பட்டது தொடர்பாக மகேஸ்வரன் கேள்வி எழுப்பினார். அதை அடுத்து எழுந்த சர்ச்சையில் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவுக்கும், மகேஸ்வரனுக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதன்போதே மகேஸ்வரன் ஜே.வி.யினரை இப்படிச் சாடினார்.

தொடர்ந்து இடம்பெற்ற வாக்குவாதத்தின் போது:-

அமைச்சர் பேரியல் அஷ்ரப்பிடம் கேட்ட கேள்விக்கு விமல் வீரவன்ஸ எம்.பி வக்காலத்து வாங்கவேண்டிய தேவையில்லை எனசுட்டிக்காட்டிய மகேஸ்வரன், ஜே.வி.பியினர் ஜனநாயக எதிரிகள், தமது மக்களைக் கொன்று குவித்து, அந்த இரத்தத்தில் குளித்தவர்கள் என்று சாடினார்.

பிக்குகளின் காவியுடையை பலாத்காரமாகக் களைந்தவர்கள் இவர்கள். அரச சொத்துக்களைத் தீயிட்டுக் கொளுத்தியவர்கள். எனவே, இங்கு ஜனநாயகம் பற்றி இவர்கள் பேசமுடியாது என்றார் அவர்.

இடையில் குறுக்கிட்ட விமல்வீரவன்ஸ, மகேஸ்வரனின் மூளை மண்ணெண்ணெயில் இயங்குவதால் அவர் சம்பந்தமற்ற கேள்விகளை எழுப்புகிறார் என்றார். கிரிமண்டல மாவத்தையில் உள்ள காணி தொடர்பான விடயத்துக்கு உரியமுறையில் கேள்வி எழுப்பும் பட்சத்தில் உரிய பதில் அளிக்கப்படும் என அமைச்சர் பேரியல் தெரிவித்தார்.

மருதமுனையில் முஸ்லிம் மக்கள் வீடுகளின்றி வீதியில் படுத்திருக்கும்போது அமைச்சருக்குச் சொந்தமான காணி விற்கப்பட்டுள்ளது எனவும் மகேஸ்வரன் எம்.பி. குறிப்பிட்டார்.

## அறநெறி ஆசிரியருக்குச் சம்பளமா? அது கொச்சைப்படுத்தும் செயல்!

### இப்படிக் கூறுகிறார் பொறுப்பான அமைச்சர்

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கி, அவர்களுடைய புனிதமான சேவையைக் கொச்சைப்படுத்தக் கூடாது என பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், பௌத்த சாசன, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமான ரத்னசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினருமான ரவி கருணாநாயக்க கடந்த வியாழக்கிழமை இரண்டு தனிநபர் பிரேரணைகளைச், சபையில் சமர்ப்பித்தார்.

முதலாவது - அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தலும், அங்கு பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்குமான பிரேரணை.

இரண்டாவது : நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கும் அரசியல்வாதிகள் எந்த ஒரு விளையாட்டு அமைப்புகளிலும் தலைவர்களாகவோ ஏனைய முக்கிய பொறுப்புக்களையே வகிப்பதைத் தவிர்த்தல் தொடர்பான பிரேரணை.

இவ்விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க மேலும் கூறியதாவது:-

அறநெறிப் பாடசாலைகள் சமயத்தை வளர்க்கவும், தர்ம சிந்தனைகளை மக்கள் மத்தியில் பரப்புவதற்குமான புனிதமான நோக்கத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டன.

இவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ரவி கருணாநாயக்க எம்.பி. முன்மொழிந்த பிரேரணைகளை நான் வரவேற்கின்றேன்.

எங்களுடைய அரசு சகல அறநெறிப் பாடசாலைகளுக்கும் இலவசமாகவே புத்தகங்களையும் சீருடைகளையும் வழங்குகின்றது.

அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். அதேவேளை, அவர்களுக்குச் சம்பளம் என வழங்கினால் அவர்களுடைய சேவை சம்பளத்திற்குச் செய்யும் ஒரு தொழிலாகிவிடும். அவர்களின் புனித சேவை கொச்சைப்படுத்தப்படுவதாக அமைந்துவிடும். எனவே, மாற்றுவழிகளில் அவர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுப்போம் - என அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க கூறினார்.




## புலிகளுடன் இறுதித்தீர்வு குறித்து பேச மட்டுமே ஜே.வி.பி. ஆதரவு

இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வு குறித்து புலிகளுடன் பேச்சு ஆரம்பிக்கப்பட்டால் மட்டுமே ஜே.வி.பி. அதை ஆதரிக்கும். இடைக்காலத்தீர்வு என்ற போர்வையில் இடம்பெறும் எந்தப் பேச்சையும் தமது கட்சி எதிர்த்தே தீரும் என்கிறார் ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ.

நாடாளுமன்றில் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடந்த வியாழக்கிழமை ஆற்றிய உரைக்குப் பதிலளிக்கும் வகையில் ஜே.வி.பியின் நிலைப்பாட்டை விளக்கிய விமல் வீரவன்ஸ, சம்பந்தனின் குறுக்கீட்டுக்கு மத்தியில் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்கள், ஜே.வி.பி. சமஷ்டியை ஆதரிக்கின்றதா எனக் கேள்வி எழுப்புகின்றனர். சமஷ்டியைப் பற்றி இப்போது எதுவும் கூறமுடியாது. இறுதித் தீர்வொன்றைக் காண்பதற்கு அனைத்துத் தரப்பினரும் கருத்துப் பரிமாற்றங்கள் செய்யவேண்டும்.

நிரந்தரமான ஒரு தீர்வைக் காண்பதற்கே ஜே.வி.பி.விரும்புகின்றது. நாம் சமாதான விரோதிகள் அல்லர். இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஒவ்வோர் அரசியல் கட்சியும் மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன. ஐ.தே.க. மட்டுமே கண்மூடித்தனமாக இதை ஆதரிக்கின்றது.

எனவே, அனைத்துக் கட்சிகளும் கலந்து பேசி ஒரு பொதுமுடிவுக்கு வரவேண்டும். புலிகள முன்வைத்திருக்கும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்பது நாட்டைத் துண்டாடுவதற்கான முதற்படி, ஜே.வி.பி.அந்த யோசனையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. எமது தாய்நாட்டைத் துண்டாட அனுமதிக்க முடியாது. நீண்டகாலமாக நிலவிவரும் இந்தப் பாரிய பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண்பதே சிறந்த வழி - என்றார் அவர். (எ-க)

## வாசகர் திருமுகம்

### கனரக வாகனங்களின் பயணம்; நெருக்கடி நேரத்தில் தடுக்கலாம்

அண்மையில் ஏற்பட்ட வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி துளசிகாவின் மரணம் எல்லோர் மனதையும் உறுத்தியிருக்கும் இவ்வாறான நிகழ்ச்சி இத்துடன் முடியப் போவதில்லை. நம் ஒவ்வொருவரினதும் குழந்தைகளுக்கும் - ஏன் நமக்கும்கூட இவ்வாறு நடப்பதை யாராலும் தடுக்கமுடியாது. அதற்காக ஒருநாள் துள்ளிக்குதித்து ரயர்களை எரித்து ஆர்ப்பாட்டம் செய்துவிட்டால் நமது வாழ்க்கை பாதுகாப்பாக அமைந்துவிடுமா? நாம எமது அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டாமா?

பாடசாலைகள், அலுவலகங்கள் ஆரம்பிக்கும், முடிவடையும் நேரங்களில் வீதிகளில் கனரக வாகனங்கள் பயணிப்பதைத் தடைசெய்ய யாராவது அதிகாரிகள் முன்வருவார்களா? அதாவது, காலை 7 மணி முதல் 9 மணி வரையும் (பாடசாலைகள், அலுவலகங்கள் ஆரம்பிக்கும் நேரம்) பின்னர் மாலை 2மணி முதல் 6மணிவரையும் (பாடசாலைகள், அலுவலகங்கள் முடிவடையும் நேரம்) லொறி, ட்ராக்டர் போன்ற கனரக வாகனங்களோ, அல்லது இராணுவ வாகனங்களோ வீதிகளில் பயணிப்பது முற்றாகத் தடைசெய்யப்படல் வேண்டும். இதனால், எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ஏனெனில், தற்போது ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாததால் கனரக வாகனங்கள் மூலம் பொருள்களை ஏற்றி இறக்குவதை இரவில் செய்யலாம். இதனால், பகலில் நகரில் சனநெருக்கடியும் குறைவடையும். இவ்வாறு முன்னரே செய்திருந்தால் எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றியிருக்கலாம்.

நான் வழமையாக திங்கட்கிழமைகளில் எனது ஊரில் இருந்து பருத்தித்துறை வீதி வழியாக யாழ்ப்பாணத்திலுள்ள எனது அலுவலகத்திற்கு வருவேன். காலை 7.30 இற்குப் புறப்பட்டு 8.30 மணியளவில் அலுவலகம் வர எண்ணினாலும் அப்படி வர பெரும்பாலும் முடிவதில்லை. ஏனெனில், அவ்வாறு வரும்போது பேருந்து, மினிவான்களைத் தவிர ஆகக் குறைந்தது 25 கனரக வாகனங்களையாவது (இராணுவ வாகனங்கள் உட்பட) எதிர்கொள்ள வேண்டிவரும். அத்துடன், இவ்வாகனங்களை ஓட்டுபவர்கள், வாகனத்தின் நான்கு அல்லது ஆறு சில்லுகளில் ஒன்றுகூட வீதியிலுள்ள பள்ளங்களிற்குள் விழுந்துவிடக்கூடாது என்ற கவனத்தில் இலாவகமாக அங்கும் இங்கும் திருப்பியபடி ஓட்டுவார்கள். இவ்வாறு அவர்கள் முழு வீதியையுமே ஆக்கிரமித்து ஓடும்போது யாரும் முந்தமுடியாது. மோட்டார் சைக்கிள் போன்ற சிறிய வாகனங்களின் 'ஹோர்ண்' சத்தம் அவர்களிற்கு நுளம்பு பறப்பது போன்ற சத்தத்தில் கேட்கிறது என நினைககிறேன். ஏனெனில், நான் பலமுறை 'ஹோர்ண்' அடித்து சிக்னல் போட்டு கஷ்ரப்பட்டு, போராடி ஒருவாறு முந்திவிட்டு சாரதியைப் பார்த்தால் அவர்கள எந்தவித சலனமும் இல்லாமல் பாக்கு சப்பியபடி அருகிலிருப்பவருடன் சுவாரஸ்யமாகக் கதைதத்துக்கொண்டு செல்வதை அவதானித்துள்ளேன். அவர்களை முந்துவதற்கு நீண்ட நேரம் நான் செய்த போராட்டம் அவர்களிற்குத் தெரிந்திருக்கவில்லை என நினைக்க பயங்கரக்கோபம் வேறுவரும். அதைவிட அலுவலக நேரத்தில் வீதியை ஆக்கிரமித்து வாகனம் ஓட்டுகிறோம் என்ற எண்ணம் சிறுதுளியேனும் அவர்களிற்கு இருப்பதில்லை. எனவே, மாநகரசபை ஆணையாளர், பிரதேச சபைத் தலைவர்கள், இராணுவத் தலைமை அதிகாரிகள் மற்றும் சம்பந் தப்பட்ட அதிகாரிகள் அனைவரையும் நான் ஒன்றாகக் கேட்டக்கொள்வது யாதெனில், பாடசாலைகள், அலுவலகங்கள் ஆரம்பிக்கும், முடிவடையும் நேரங்களில் கனரக வாகனங்கள் அனைத்தையும் வீதிகளில் செல்வதை முற்றாகத் தடைசெய்யுங்கள். அப்படிச் செய்தால் விபத்துக்களின் எண்ணிக்கை அரைவாசியாகவேனும் குறைவடையும்.

கலாநிதி **நா.சிவயோகன்** தும்பளை.

### உரிய முகவரிக்கு தபால் கிடைக்குமா?

2000ஆம் ஆண்டு இடம்பெயர்வின்போது அரியாலையில் இருந்து கச்சேரிப் பகுதியில் தற்காலிகமாகக் குடியிருந்தோம். அந்த வேளையில், எனது தற்காலிக முகவரியினை யாழ்ப்பாண பிரதம தபாற்கந்தோருக்கு முறைப்படி விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து கொடுத்தேன். அதன்பின் ஒழுங்காக எனது முகவரிக்குரிய தபால்கள் எனது கைக்குக் கிடைத்தன. பின்னர் 2004இல் மீண்டும் எனது சொந்த இடத்திற்குச் சென்று குடியமர்ந்தேன் அதன் பிற்பாடு மீண்டும் எனது சொந்த முகவரிக்கு எனக்குரிய தபால்களை விநியோகிக்குமாறு கோரி முறைப்படி பிரதம தபாற்கந்தோரில் இருந்து விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூர்த்திசெய்துகொடுத்தேன். அதன்பின்னர் எனது முகவரிக்குரிய தபால்களைச் சீராகப்பெற முடியவில்லை. சொந்தமுகவரி இடப்பட்ட தபால்களை எனது பழைய தற்காலிக முகவரிக்கே சேர்ப்பிக்கிறார்கள்.

இதனால், எனக்குரிய மிகவும் அவசியமான தபால்கள்கூட காலக்கிரமத்தில் எனக்குக் கிடைபதில்லை. அதுவும் பலரின் கைகளுக்குச் சென்று உடைத்த நிலையில்தான் எனக்குக் கிடைக்கின்றது. இதுபற்றி இரண்டு, மூன்று தடவைகள் தபாற்கந்தோரிலுள்ள தபால் விநியோகத்திற்குப் பொறுப்பாளவரிடம் தெரிவித்தேன். அப்போது அவர் உங்களுக்குரிய தபால் விநியோகம் இனிமேல் சீராக நடைபெறும் என உறுதி கூறினார். எனினும், இதுவரையில் முன்பிருந்த நிலையே காணப்படுகின்றது. இதுகுறித்து தபால் விநியோகஸ்தரிடம் கேட்டபோது. ஆள்பற்றாக்குறை காரணமாக சில பிரதேசங்களுக்கு அடிக்கடி விநியோகஸ்தர்களை மாற்றி விடுவதனால் இந்தப் தவறு ஏற்படுகிறது என்று கூறுகிறார். இந்தநிலை இனி எப்போது சரி வரும்? உரியவர்கள் இதைக்கவனிப்பார்களா?

**ஜெயதருமன்,** அரியாலை.

# குழந்தைகளுக்கு

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களின் சுகாதார நிலைமைகளைப் பொறுத்தமட்டில் மிகவும பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன.

இருபது ஆண்டுகால யுத்தம் போதாதென்று மீண்டுமொரு பாரிய அழிவை நாம் சந்தித்துள்ளோம். அதாவது, 'சுனாமி' என்னும் இயற்கை அனர்த்தத்தால் இங்கு வாழும் மக்கள் உயிழப்பு, பொருள் சேதம், உணவு, உடை, உறையுள் அற்றவர்களாகவும் அநாதைகளாகவும் அல்லற்பட்டுத் தவித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

கடல் அலைகளின் தாக்கத்தால் பாதிப்புற்ற இடங்களிலும் இனி மீளக்குடியமர்வதில் பாரிய சிக்கல்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, தொற்றுநோய்கள் பரவக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

அழைக்கப்படுவதுடன், இது 'ஷிகெல்லா' போன்ற கிருமிகளின் தாக்கத்தால் ஏற்படுகின்றது. கடுமையான வயிற்றோட்டத்துக்கு இன்னொரு காரணம் கொலரா ஆகும்.

### கிருமிகள் எவ்வாறு உடலில் நுழைகின்றன

தொற்றுதலடைந்த உணவு, கழுவப்படாத கை, சுத்தமில்லாத போத்தல் குப்பி, சூப்பி (இதனாலேயே போத்தல் மூலம் பால் கொடுத்தல் முற்றாக நிராகரிக்கப்படல்வேண்டும்) என்பவற்றுடன் நோய்க்கிருமிகள் உடலைச் சென்றடைகின்றன. அழுக்கான நிலத்திலுள்ள பொருள்களைக் குழந்தை வாயினுள் வைக்கும்போது நோய்க்கிருமிகள் சென்றடைகின்றன. எனவே, தொற்றுதலைத் தவிர்த்துக் கொளவதற்கு நல்ல பொதுச்சுகாதாரமும் உண

போதே அருந்துவதால் நீரிழப்பைத் தடுக்க முடியும். ஓரளவு அல்லது அதிகப் படியான நீரிழப்பு உள்ள குழந்தைகளுக்குச் சுகாதார நிலையங்களில் 'ஜீவனி' என்ற பெயரில் கிடைக்கும் பதார்த்தத்தை நீரில் அளவோடு கலந்து கொடுத்தல் வேண்டும்.

வயிற்றோட்ட காலங்களில் உணவூட்டலைக் குழந்தைகளாக இருந்தாலும் சரி, முதியோராக இருந்தாலும் சரி வழமைபோல மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால், உடலின் சமநிலையை நாம் தவறாது பேணவேண்டும். இக்காலங்களில் உணவுக் கட்டுப்பாடு அவசியமற்றது. இது பாதகமானதுடன் நிலைமையை மோசமாக்கக் கூடியதுமாகும். பிள்ளைக்குப் பசியின்மை இருப்பின் சிறிய அளவிலான உணவுகளை அடிக்கடி கொடுக்கவேண்டும். வயிற்றோட்டம் குணமாகியதும் சாதாரண உடல் நிறையைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு மேலதிக உணவு வேளையைத் தாய்மார்கள் வழங்கவேண்டும்.

அடுத்து, ஜீவனியின் பாவனை பற்றி எடுத்துக்கொண்டால் ஜீவனியானது பக்கெட்டுக்களில் கிடைக்கிறன. பக்கெட்டிலுள்ள முழு

இதனைத் தவிர்த்தல் மிக நன்று).

✣ குழந்தைக்காக உணவு தயாரிக்கும் முன் கைகளை நன்கு சவர்க்காரமிட்டுக் கழுவுதல் வேண்டும்.

✣ பழச்சாறுகளையோ அவித்த அவசிய மற்ற உணவுகளையோ தயாரிப்பதற்குக் கொதித்தாறிய நீரைப் பாவித்தல் வேண்டும்.

✣ குடிப்பதற்குத் தாயும் சேயும் கொதித்

து.ஜெயரூபன்
கந்தரோடை.

தாறிய நீரைப் பாவித்தல் வேண்டும்.

✣ ஈக்கள் மொய்க்காதபடி உணவுப் பதார்த்தங்களை மூடி வைத்தல் வேண்டும்.

✣ குடும்பத்தின் சகல அங்கத்தவர்களும் மலகூடத்தைப் பாவித்தல் வேண்டும்.

✣ தனிநபர் சுகாதாரத்தைப் பேணுதல்.

✣ உணவுண்ண முன்னரும் மலம் கழித்த பின்னரும் கைகளை நன்கு சவர்க்காரமிட்டுக் கழுவுதல் வேண்டும்.

✣ ஈக்கள் மொய்க்காதபடி குப்பைகளை

# வயிற்றோட்டம் உண்டானால் கவனம் மிகத்தேவை

குறிப்பாக, குடிதண்ணீரால் பல நோய்கள் பரவக்கூடும். எனவே, இந்த மக்களை நலன்புரி முகாம்களில் தற்காலிகமாகத் தங்கவைத்து நல்ல குடிதண்ணீரும் உணவும் நோய்த்தொற்று நீக்கி மருந்துகளும் சம்பந்தப்பட்டோரால் வழங்கப்பட்டால் மாத்திரமே இனிவரும் உயிரிழப்புகளையும் தடுக்கமுடியும்.




குறிப்பாக, நீரினால் பரக்கூடிய ஒரு நோயை எடுத்துக்கொண்டால், வயிற்றோட்டம் ஆனது மிகவும் ஆபத்தான நோயாகும். இது சிறு பிள்ளைகள் முதல் முதியோர் வரை தாக்கக் கூடிய நோயும், உயிரிழப்புகளை ஏற்படுத்தக் கூடிய நோயுமாகும். சுத்தமான நீரையும் மலகூடங்களையும் பாவிப்பதனால் இந்நோயின் தாக்கத்தில் இருந்து விடுபடலாம்.

குழந்தைப் பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும். பிள்ளையொன்று 24 மணித்தியாலயத்திற்குள் மூன்றுக்கு மேற்பட்ட முறை அல்லது அதற்கு மேலும் நீர்த்தன்மையான மலத்தைக் கழிக்குமிடத்து அப்பிள்ளையானது வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்டுள்ளது எனக்கொள்ள முடியும். பல குழந்தைகள் 6-8 முறை திரவ நிலையில் சாதாரணமாகவே மலங்கழிப்பதால், இவ்வரைவிலக்கணம் இவ்வாறான குழந்தைகளுக்குப் பொருந்தாது. வயிற்றோட்டமானது வாந்தி, காய்ச்சல், வயிற்றுவலி போன்ற ஏனைய குணங்குறிகளோடு பெரும்பாலும் காணப்படுவதுடன், அநேகமாகச் சிறுகுடலில் வைரஸ் கிருமிகள் தொற்றிக்கொள்வதாலேயே ஏற்படுகின்றது. மலத்தில் இரத்தம் அல்லது சீதம் இருக்கும் நிலைமை வயிற்று வாதை என்று

வுச் சுகாதாரமும் பேணப்படல் அவசியம்.

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் மரணத்தை ஏற்படுத்தும் ஒரு முக்கியமான நோய் வயிற்றோட்டமாகும். அநேகமாக வயிற்றோட்டமானது வைரஸ் கிருமிகளால் ஏற்படுவதால், அவற்றிற்கென விசேடமான சிகிச்சை இல்லை. இவை சில நாள்களில் தாமாகவே மறைந்துவிடுகின்றன. வயிற்றோட்ட நோயின் போது குடலினுள் விடுவிக்கப்படும் அதிகளவான நீரும், உப்பும் வயிற்றோட்டத்தின்போது மலத்துடன் வெளி யேறுகின்றன. இதனால், ஏற்படும் நீரிழப்பினால் உடற் தொழிற்பாடுகள் பாதிக்கப்படாதபடி திரவ ஆகாரங்களினால் இந்நீரிழப்பு நிவர்த்திசெய்யப்படல் வேண்டும். இது புறக்கணிக்கப்படின் மரணம் சம்பவிக்கலாம். எனவே, வயிற்றோட்டத்திற்கு நேரகாலத்துடன் சிகிச்சை ஆரம்பிக்கப்படல் வேண்டும். இதனால் அநியாய உயிரிழப்பைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

குழந்தைப் பிள்ளைகளில் நீரிழப்பை அறிந்துகொள்வதற்கான பிரதான அறிகுறி தாகம் எடுத்தல் ஆகும். குழந்தைகளில் அதிகப்படியான அழுகை அல்லது எரிச்சல் தன்மை தாகத்தினால் ஏற்படுகின்றது. தோல் வரட்சி உட்குழிந்த கண்கள், வாய், நா வரட்சி, அழுகையின்போது குறைவான கண்ணீா, குறைவான சிறுநீர் வெளியேறுதல், உதடுகள் வறண்டு காணப்படல் என்பன இதன் ஏனைய அறிகுறிகளாகக் கொள்ளலாம். எனவே, வயிற்றோட்டம் உள்ள பிள்ளையொன்றில் இவ்வாறான குணங்குறிகளைப் பார்ப்பது மிக முக்கியம்.

வயிற்றோட்டத்தைத் தடுப்பதற்கு வீட்டில் தயாரிக்கப்படும் திரவங்களினால் நீரிழப்பைத் தடுக்கமுடியும். திரவங்களை அதிகமான அளவில் வயிற்றோட்டம், வாந்தி ஆரம்பிக்கும்

உள்ளடக்கத்தையும் கொதித்தாறிய ஒரு லீற்றர் தண்ணீரில் இட்டுக் கரைக்கவேண்டும். ஒருமுறை தயாரிக்கப்பட்ட ஜீவனி 24 மணித்தியாலத்திற்குள் பாவித்து முடிக்கப்படல் வேணடும். ஒரு கோப்பையையும் கரண்டியையும் கொண்டு முடியுமானவரை அடிக்கடி குழந்தைக்கு உணவூட்ட வேண்டும். நீரிழப்பு உள்ள வரை பிள்ளைக்கு ஜீவனி கொடுக்கவேண்டும்.

### வயிற்றோட்டத்தைத் தடுக்கும் முறைகள்

✣ குழந்தைகளுக்கு 4ஆம் மாதம் வரை தாய்ப்பால் மட்டும் கொடுத்தல் (புட்டிப்பால் வயிற்றோட்டம் ஏற்பட வழிவகுக்குமாதலால்

முறைப்படி அகற்றுதல், எரித்தல் அல்லது புதைத்தல் வேண்டும்.

இப்படியான சுகாதார முறைமைகளைப் பற்றி வயிற்றோட்ட நோயிலிருந்து எம்மையும் குழந்தைகளையும் பாதுகாப்பது நமது அனைவரதும் கடமையாகும்.

இன்றைய சூழ்நிலையில் வாழ்வாதாரமற்று இயற்கையின் கொடூரத்தால் அல்லற்படும் எம்மினிய அன்புள்ளங்களுக்கு எம்மால் இயன்ற உணவு, மருத்துவ உதவிகளை இயன்றளவு நல்குவதன் மூலம் மென்மேலும் இப்படியான தொற்றுநோய்களின் பாதிப்பால் அவர்கள் அல்லற்படாது தடுக்கமுடியும். ✦

# பெண்களை அதிகளவில் தாக்கும் குருதிச்சோகை

பெண்களை அதிகம் பாதிக்கும் நோய்களுள் இரத்தச் சோகையும் ஒன்றாகும். இந்நோய் பெண்களுக்கு மாதவிலக்கின் போது அதிகளவு குருதி வெளியேறுதல், -அதிகளவான பிள்ளைகளைப் பெறுதல், இரும்புச்சத்துள்ள உணவுகளை உண்ணாமை போன்ற காரணங்களால் ஏற்படுகிறது.

### இந்நோயின் அறிகுறிகள்

எமது இரத்தத்தில், வெள்ளை, சிவப்பு ஆகிய இரு அணுக்கள் உள்ளன. வெள்ளை அணுக்கள் நோய்க்கிருமிகளை எதிர்த்துப் போராடக்கூடியவை. சிவப்பு அணுக்கள் உடல் முழுவதும் உயிர்க்காற்றை எடுத்துச் சென்று உடலை இயக்கக் கூடியவை. இச் சிவப்பு அணுக்கள் குறைவடையும் போது தான் நோய்க்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

அவையாவன:-

★ உடல் பலவீனமாக இருக்கும். தலைச்சுற்று ஏற்பட்டு மயக்கம் உண்டாகும்.

★ தலைவலி, கால்வலி, தலைச்சுற்று ஏற்பட்டு வேலை செய்யும்போது அதிக களைப்பு ஏற்படும்.

★ கண்கள் வெளிறி இரத்தப் பசையற்றுக் காணப்படும்.

### நோய்வராது தடுக்க

சரியான நேரத்தில் உணவுகளை உட்கொள்வதுடன், இரும்புச்சத்து அதிகமுள்ள இலை, மரக்கறிவகைகளை அதிகமாக உண்ணுதல். அதிகமான குழந்தைகள் பெறுவதைத் தடுத்தல்.

இதன்மூலம் இரத்தச் சோகை ஏற்படுவதைத் தடுக்கலாம், இந்த நோயால் பெண்களின் பேறுகாலத்தில் உயிரிழப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. இதனால் இந்நோய் வரமுன் காத்து சுகவாழ்வுக்கு வழியேற்படுத்துவது அவசியமல்லவா.

- தயா.

# நீரிழிவு நோயிலிருந்து தப்புவது எப்படி? சளி, தடிமன் ஏற்படுவது எவ்வாறு?

கடந்த 21.02.2005 அன்று சுகநலம் பகுதியில் பிரசுரமாகிய கட்டுரையின் தொடர்ச்சி இது.

### சளி, தடிமன்

உணவின்போது தண்ணீரைக் குடிக்கும் பழக்கத்தினால் மண்ணீரலின் வெப்பசக்தி குளிர்ந்து நீர்சசக்தி தேக்கம் கொள்ளும்போது, நுரையீரலானது, மண்ணீரலிலிருந்து காற்றலைகளாக உள்ள வெப்ப சக்தியைக் கிரகிப்பதற்குப் பதிலாக, ஈரப்பதம் மிஞ்சிய நீர்ச்சக்தியைக் கிரகிக்கிறது. இதுவே, நுரையீரலில் நீர் தேக்கம் காரணமாகிறது. நுரையீரலில் தேக்கம் கொள்ளும் இந்த நீர் தேங்க, சக்தியானது சுவாசத்தின் மூலமாக வெளியேற்றப்படவேண்டும். அதிகப்படியான நீர்ச்சக்தி, நீராவியாக மூக்கின் வழியாக வெளியேற்றப்படவேண்டும். அதிகப்படியான நீர்ச்சக்தி, நீராவியாக மூக்கின் வழியாக அதிகமாக வெளியேறும்போது தான் மூக்கில் முணுமுணுப்பு ஏற்பட்டு முதல் தும்மல் வெளியாகிறது.

முதல் தும்மல் தொடங்கி 24 மணி நேரத்திற்குள் இந்த நீர்ச்சக்தி தொண்டையில், தேங்கி சளி, இருமல் என்று தொடங்கிக் கடைசியாக நுரையீரல் முழுமையிலும் சளி கட்ட ஆரம்பிக்கிறது.

தாய்மார்களே! உங்கள் குழந்தைகளுக்கு முதன்முதலாக ஏற்படும் முதல் உபாதை தும்மல் தடிமன் தான்! பின்னரே காய்ச்சல், இருமல் என்று ஏற்படுகிறது. இதற்குக் காரணம் நீங்கள் கொடுக்கும் பாலில் தண்ணீர்ச் சத்து அதிகமாக இருக்கிறது. உணவுச் சத்தும் அடங்கியிருக்கிறது.

குழந்தைகளுக்குத் தண்ணீர்த் தாகம் எடுக்கும்போது அழுகிறது. பிறந்த குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்கள் உடனே ஊட்டுவார்கள். பாலில் நீர்ச்சத்து இருப்பதால் குழந்தை பாலைக் குடித்து, தண்ணீர்த் தாகத்தை அடக்கிக்கொள்கிறது. ஆனால், தாய்மார்களே! நீங்கள் கொடுக்கும் அந்தப் பாலில் தண்ணீர்ச் சத்துடன் உணவும் அடங்கியிருக்கிறது என்பதை உணரத் தவறிவிடுகிறீர்கள். பசிக்குத்தான் உணவு; தாகத்திற்கு அல்ல! தாகத்திற்குத் தண்ணீர் மட்டுமே; உணவு அல்ல.

இவ்வாறாக, தாகம் எடுக்கும்போது உணவையும் பசி எடுக்கும்போதும் பாலையும் கொடுப்பதன் மூலம் பாலுடன் கலந்துள்ள நீர்ச் சக்தியைக் கொடுக்கும்போதும் மேலே சொன்ன முறையில் தும்மல், சளி, தடிமன் ஆரம்பமாகிறது.

தாய்மார்களே! பாலருந்தும் குழந்தைகளுக்கு உணவளிப்பதிலும் தாகத்தின்போது தண்ணீரை மட்டுமே கொடுக்கவேண்டும் என்பதிலும் கவனமாக இருங்கள். இதைக் கண்டுபிடிக்கும் முறை மிகச் சுலபமாகும். குழந்தை எப்பொழுது அழுதாலும், முதலில் தண்ணீரைக் குடிக்கக் கொடுங்கள். குழந்தை பசிக்காக அழுதிருக்குமனால் தண்ணீர் வாயில் பட்டதும், அதைத் தட்டிவிட்டு மீண்டும் அழ ஆரம்பிக்கும். இப்போது பாலைக் கொடுங்கள். திருப்தியாகக் குடித்துவிட்டுத் தூங்கும். குழந்தைக்குத் தாகம் மட்டுமே இருப்பின் தண்ணீரை முழுமையாகக் குடித்துவிட்டுத் திருப்தியாகத் தூங்கும். எனவே, உங்கள் குழந்தைகளுக்கு:

✦ பசி எடுத்துவிட்டால் தாமதிக்காமல் உடனடியாக உணவைக் கொடுங்கள்.

✦ அதிகக் குளிர்ச்சியாகவோ அல்லது அதிக சூடாகவோ உணவை உண்ணச் செய்யாதீர்கள்.

✦ உணவைச் சிறுகச்சிறுக எடுத்து, வாயில் வைத்து முடிந்த மட்டும் நன்றாக மென்று விழுங்கச் சொல்லுங்கள்.

✦ உணவு உண்ணும்போது இடையிடையே தண்ணீர் அருந்துவதை அனுமதிக்காதீர்கள்.

- மருத்துவன் -

✦ உண்மையிலேயே தாகம் அதிகமாக இருப்பின், உணவருந்துதலை, உடனடியாக நிறுத்தவேண்டும்.

✦ குறைந்தது 10 நிமிடங்களாவது வயிற்றின் சுரப்புநீர்களுடன் உட்கொண்ட உணவு முழுமையாகக் கலக்கும் வரை குடிக்கத் தண்ணீர் கொடுக்கவேண்டாம்.

✦ பத்து நிமிடங்கள் கழித்து சாதாரண தண்ணீரையே பருகக் கொடுங்கள்.

✦ குளிர்ச்சியான நீரையோ, பதார்த்தங்களையோ முடிந்தவரை தவிர்க்கவேண்டும் என்ற கல்வியை ஊட்டிவளருங்கள்.

✦ இவற்றையும் மீறித் தடிமன் பிடிக்குமானால் பால், தேநீர், கோப்பி போன்றவற்றைத் தடிமன் ஆரம்பித்த 24 மணி நேரங்களுக்குச் சுத்தமாக நிறுத்திவிடட்டும்.

✦ வெதுவெதுப்பான அல்லது சூடான நீரைத் தவிரத் தாகத்திற்கு வேறெதனையும் பருக வேண்டாம்.

✦ உணவிற்குப் பத்து நிமிடங்கள் முன்பு அல்லது பத்து நிமிடங்கள் பின்பு தண்ணீர் அருந்த வேண்டாம்.

✦ உணவு உண்பதற்குச் சற்று முன்போ அல்லது உணவருந்திய பின்போ அல்லது அத்தியாவசியமாகத் தண்ணீர் அருந்தவேண்டும் என்ற நிலை ஏற்பட்டாலோ வெதுவெதுப்பான நீரையே அருந்துங்கள்.

✦ உண்ணும்போது நடுவே தாகம் ஏற்பட்டால் உண்ணுவதை நிறுத்திவிடுங்கள். பத்து நிமிடங்கள் கழித்து உங்கள் தாகத்தைத் தணித்துக்கொள்ளுங்கள்.

ஜீரண உறுப்புகளின் முதல் உறுப்பான வாய்ப்பகுதியிலேயே ஜீரண சக்தி இல்லாமல் இருக்கும்போது, அதனைத் தொடர்ந்து செயலாற்றக் கூடிய மற்ற ஜீரண உறுப்புகளும் நாளடைவில் தத்தம் செயல் திறனை இழக்கின்றன. இவ்வுறுப்புகளினூடே உணவு செல்லும்போது ஜீரணம் ஒழுங்கற்ற முறையிலேயே நடக்கிறது. ஜீரணம் பூர்த்தியாவதுமில்லை.

ஜீரணிக்கப்படும் உணவானது, இறுதியாக குளுக்கோஸாக மாற்றப்படுகிறது. இந்தக் குளுக்கோஸ்தான் உடல் செல்கள் அனைத்தினாலும் உபயோகப்படுத்தப்படுகிறது.

ஒவ்வொருவரிடத்திலும் உள்ள ஜீரண உறுப்புகள், அவரவர் ஜீரண உறுப்புகளின் மூலமாக ஜீரணிக்கப்பட்டு குளுக்கோஸாக மாற்றப்படும்போது, அவரவர் உடல் இயற்கைக்கு ஏற்றவாறு தனித்தன்மை வாய்ந்ததாக மாறுகிறது. இந்த வகையில் ஜீரணத்தின் கடைசி நிலையில் வெளிப்படுத்தப்படும் விற்றமின்களும், தாதுக்களும், குளுக்கோஸும் ஜீரண உறுப்புகளின் இயக்கத்திறன் மூலம் வெளிப்படுத்தப்படும்போதுதான் அவையனைத்தும் குறிப்பிட்ட நபருக்கு ஒத்துக்கொள்ளக்கூடிய தனித்தன்மையைப் பெறுகிறது.

இதைத் தவிர்த்து ஊட்டச்சத்து என்ற முறையில் விற்றமின்கள் நிறைந்தது, புரோட்டீன்கள் நிறைந்தது என்று வியாபார முறையில் தயாரிக்கப்படும் பால் பவுடர்களும் இன்னும் பிற தயாரிப்புகளும் நமக்கு இருவகைகளில் கேட்டை விளைவிக்கக் கூடியவைகளாக உள்ளன.

(வளரும்)

# தொழில்சார் திட்டங்களை அதிகரித்தால் வேலையில்லாப் பிரச்சினையைக் குறைக்கலாம்

**"அரசியல் ரீதியான பிரச்சினைகள் கூர்மையடைய வேலையில்லாப் பிரச்சினையும் முக்கிய காரணம்" என்ற தலைப்பில் 08.03.2005 ஆம் திகதிய உதயனில் பிரசுரமான கட்டுரையின் இறுதிப்பகுதி இன்று பிரசுரமாகிறது.**

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் தொழில்நுட்பம் சார்ந்த பாடங்களில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி நிலையை தோற்றியோர் வகையிலும் சித்தியடைந்தோர் வகையிலும் அட்டவணை 05 இல் அவதானிக்க முடிகிறது.

அட்டவணை 05 ஊடாக நோக்குகின்ற பொழுது 1998 ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில 8 லட்சத்து 80 ஆயிரத்து 88 பரீட்சார்த்தகள் தோற்றினர். அதில் சித்தியடையத் தவறியவர்களுள் ஒப்பீட்டு ரீதியில் அதிகமாகக் காணப்படுவதைக் காணலாம். இப்பாடநெறிகள் அடிப்படை தொழில்சார் விருத்திக்கு எவ்வாறு அமைகிறது என்பதையும் இதில் ஏற்படும் வீழ்ச்சித் தன்மை வேலைவாய்ப்பைப் பாதிப்படையச் செய்வதுடன், தொழில்சார் முன்னேற்றத்தையும் பாதிப்படையச் செய்கிறது.

**அட்டவணை 05** — ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைக்கு 1998இல் தோற்றியோரும் சித்தியடைந்தோரும்

| பாடங்கள் | சித்தியடைந்தோர் D+C+S | சித்தியடைந்தோர் வீதம் (%) | சித்தியடையாதோர் F | சித்தியடையாதோர் வீதம் (%) |
|---|---|---|---|---|
| மரவேலை | 1,594 | 79.48 | 800 | 20.52 |
| மேசன் | 84 | 95.43 | 4 | 4.55 |
| உலோக | 30 | 81.35 | 70 | 18.67 |
| வானொலி தொழில்நுட்பம் | 353 | 71.46 | 141 | 28.54 |
| மோட்டார் தொழில்நுட்பம் | 773 | 65.89 | 127 | 14.11 |
| கடல்நீர் மீன்பிடி | 34 | 97.14 | 1 | 2.86 |
| நன்னீர் மீன்பிடி | 9 | 90.10 | 1 | 10.10 |
| விவசாயம் | 106,637 | 79.49 | 27,507 | 20.50 |
| தோட்டவேலை | 8584 | 88.53 | 1,112 | 11.47 |
| கால்நடை வளர்ப்பு | 63 | 64.29 | 35 | 35.71 |
| மட்பாண்டவேலை | 103 | 91.15 | 10 | 8.85 |
| ஆடைநெய்தல் | 413 | 87.5 | 59 | 12.5 |
| நில அளவை | 182 | 77.12 | 64 | 22.86 |
| வீட்டுத்தோட்டம் | 125 | 62.24 | 27 | 17.76 |
| மனையியல் | 12,287 | 84.10 | 2,341 | 16.20 |

(மூலம்: பரீட்சை திணைக்களம் 1998)

## அரசவேலையின் மீது நாட்டம்

நமது நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரிப்பதற்குச் சமூகம் சார்ந்த காரணிகளின் செல்வாக்கினால் அரச துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதையும் தனியார்துறை மீது நம்பிக்கை அற்ற தன்மையும் காணப்படுகின்றமையைக் குறிப்பிடலாம். அதிகளவு மக்கள் தொழில் என்றால் அரச வர்க்கத்தில்தான் பெற வேண்டும் என்ற மனப்பாங்குடன் இருப்பதைக் காணமுடிகிறது. இது பற்றி மேலதிக விளக்கதை அளிப்பதாக அட்டவணை 06 அமைகிறது. இதில் அரச, தனியார்துறை, சுயதொழில் மீதான நாட்டத்தை தரவுகள் ஊடாக அறிய முடிகிறது. இதில் அரசதுறையையே அதிகளவு விரும்புவதை அவதானிக்க முடிகிறது. அத்துடன், ஒப்பீட்டு ரீதியில் வடமாகாணத்தைப் பொறுத்தமட்டில் தனியார்துறை மீதான வேலை நாட்டம் குறைவாக இருப்பதைக் காணமுடிகிறது.

## தங்கிவாழ்வோர் அதிகரிப்பு நிலை

இலங்கையில் ஆண், பெண் மற்றும் பல்வேறு வயது மட்ட அடிப்படையிலும் கல்வித்தர அடைவு மட்டத்திலும் உள்ளவர்கள் பெற்றோருக்குச் சுமையாகவும் அவர்களைத் தங்கிவாழுகின்ற நிலைமையையும் அவதானிக்க முடிகிறது. இத்தன்மை வேலைவாய்ப்பின்மையைத் தெட்டத்தெளிவாகக் காட்டிநிற்கிறது. இதனை இளைஞர், யுவதிகள் நன்கு உணர்ந்து தம்மைத் தயார்ப்படுத்துதல் அவசியமாகிறது. அத்துடன் அரசும் அதற்கான ஏற்பாடு செய்வது இன்றியமையாதது.

அட்டவணை 07 ஊடாக வயது அல்லது கல்விமட்ட நிலைகளில் தங்கிவாழ்வோர் தன்மையை அவதானிக்க முடிகிறது. பட்டப் படிப்பும் அதற்கு மேல் பூர்த்திசெய்தவர்கள் 73.9% ஆனவர்கள் முழுமையாகத் தங்கி இருப்பதையும் பாடசாலை செல்பவர்கள் 47.4% பேர் தங்கி வாழ்வதையும் ஒப்பீடு செய்து பார்க்க முடிகிறது. இதனைக் கருத்திற்கொண்டு இளைஞர்கள் செயற்திறனுடன் முயற்சியாண்மை செய்வது அவசியமாகிறது.

## வேலைவாய்ப்பை அதிகரிக்கும் செயல்நிலைகள்

வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கான சந்தர்ப்பங்களை அதிகரித்தல் அரச கடமையாகும். கடந்த காலத்தைப் பொறுத்த மட்டில் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பம் மிகமிகக் குறைவாகவே இடம்பெற்று வருகின்றது.

**அட்டவணை 06** — சமூகப் பின்னணி மற்றும் தொழில் முன்னுரிமை

| குழு | அரசதுறை | தனியார்த் துறை | சுயதொழில் | ஏனையவை |
|---|---|---|---|---|
| மொத்தம் | 53.40 | 20.00 | 24.80 | 1.5 |
| ஆண் | 43.2 | 21.7 | 33.3 | 1.5 |
| பெண் | 66.8 | 17.9 | 13.5 | 1.6 |
| நகர | 44.7 | 27.1 | 26.1 | 2.0 |
| கிராம | 55.8 | 18.1 | 24.2 | 1.5 |
| தோட்ட | 52.7 | 19.5 | 27.8 | - |
| மேல் மாகாணம் | 40.5 | 28.8 | 28.8 | 2.6 |
| மத்திய மாகாணம் | 55.8 | 22.1 | 22.7 | 0.3 |
| தென் மாகாணம் | 57.7 | 18.4 | 23.0 | 1.0 |
| வடமாகாணம் | 75.0 | 5.5 | 19.5 | - |
| கிழக்கு மாகாணம் | 72.2 | 11.9 | 16.0 | - |
| வடமேல் மாகாணம் | 48.0 | 21.7 | 28.3 | 1.4 |
| வடமத்திய மாகாணம் | 57.8 | 10.6 | 30.6 | 1.1 |
| ஊவா மாகாணம் | 59.8 | 10.6 | 26.3 | 3.4 |
| சப்பிரகமுவ மாகாணம் | 54.6 | 19.2 | 28.6 | 2.2 |
| க.பொ.த.உயர்தர தகைமை | 82.3 | 22.7 | 11.6 | 3.3 |
| பட்டம் அல்லது அதற்குமேல் | 72.2 | 21.5 | 15.1 | 1.3 |

(மூலம்: இளைஞர் மதிப்பீட்டாய்வு 2000 - கொழும்புப் பல்கலைக்கழகம்

படித்த மற்றும் வேலையுலகில் உள்ளவர்களுக்கான பல்வேறு செயற்றிட்டங்கள் எமது பிரதேச ரீதியிலும் நாடளாவிய ரீதியிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனலாம். வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதில் அண்மைய காலத்தில் அரசசார்பற்ற அமைப்புக்களின் பங்கும் தனியார் நிறுவனங்களின் பங்கும் அளப்பரியது எனலாம்.

☆ இலங்கை மன்றக் கல்லூரியின் "இலங்கைக்கான ஒரு நோக்கு" என்ற திட்ட அறிக்கையானது இளைஞர்கள் வேலையுலகு மீதான அக்கறைத் தன்மையை ஏற்படுத்தவும், வேலைவாய்ப்புத் தொடர்பான சந்தர்ப்பத்தை எவ்வாறு கட்டியெழுப்பலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

☆ பெற்றோர் கருத்தை மாணவர்கள் மதித்து அதற்கு ஏற்ப ஒழுகுதல் அவசியம்.

☆ சமூக, கலை, கலாசார விழுமிய நிலைக்கு அப்பாற்பட்டு நின்று எடுத்த பொறுப்புக்களையும் கடமையையும் வேலைவாய்ப்பு ஊடாகச் செய்தல் மிகவும் முக்கியம். மேற்கூறப்பட்ட காரணிகளுக்கு அப்பாற்பட்டுச் செயற்படத் தயாராகுதல் முக்கியமாகிறது.

☆ தனியார்துறை வேலைவாய்ப்பு முக்கியத்துவத்தை விரிவடையச் செய்தல் அவசியமாகிறது. இதற்குத் தென்பகுதியில் "இளம் முயற்சியாளர் ஸ்ரீலங்கா" என்ற செயற்றிட்டம் நல்ல எடுத்துக்காட்டு. இது Junior Achievement என்ற சர்வதேச திட்டத்தை ஒத்ததாகும். இத்திட்ட நடைமுறைகள் ஊடாகத் தனியார்துறை முயற்சியாண்மை வலுப்பெறச் சார்பாக உள்ளது.

☆ 'இளம் முயற்சியாளர் ஸ்ரீலங்கா என்ற செயற்றிட்டம் வடபகுதி வேலை உலகுக்குத் தனியார் துறையினர் செல்வாக்கைப் பெறச்செய்தலாகும். இதனூடாக அரச வேலைவாய்ப்பை

**அட்டவணை 07** — பெற்றோர் மீது தங்கியிருக்கும் இளைஞர், யுவதிகள்.

| வகை | முழுமையாகத் தங்கியிருப்பவர்கள் | ஓரளவு தங்கியிருப்பவர்கள் | சுதந்திரமாக இருப்பவர்கள் |
|---|---|---|---|
| மொத்தம் | 71.8 | 19.9 | 17.3 |
| ஆண் | 81.0 | 13.2 | 25.1 |
| பெண் | 85.1 | 7.8 | 7.1 |
| நகர | 67.0 | 11.7 | 21.3 |
| கிராம | 73.6 | 10.3 | 16.1 |
| தோட்ட | 65.1 | 18.0 | 18.9 |
| வரு 15-19 | 87.0 | 6.7 | 6.2 |
| வரு 20-24 | 64.0 | 13.8 | 22.6 |
| வரு 25-29 | 41.2 | 16.3 | 40.5 |
| க.பொ.த.உயர்தரத்துக்கு ஆயத்தம் செய்பவர்கள் | 77.8 | 9.1 | 13.0 |
| க.பொ.த.உயர்தரம் தகைமை | 73.3 | 10.6 | 13.6 |
| பட்டப்படிப்புக்கு அல்லது அதற்கு மேல் | 75.9 | 10.1 | 13.9 |
| பாடசாலை செல்லாதவர்கள் | 47.4 | 5.3 | 47.4 |

(மூலம்: இளைஞர் தொடர்பான மதிப்பீட்டாய்வு)

மட்டும் இன்றி அரசசார்பற்ற நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பை அதிகரிக்க வாய்ப்பளிக்கிறது.

☆ விஞ்ஞான, தொழில்நுட்ப பாடத்தை விரிவுபடுத்தல், பல்வேறு மட்டத்தினுள் தொழில்நுட்பங்களை ஈர்த்துக் கொள்ளத்தக்க மனித வளத்தையாக்குதல். ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்விவரை விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்வியை விரிவாக்கம் செய்து வேலையுலகுக்கு இலகுவாக முகம்கொடுக்க தயார்ப்படுத்தல்.

☆ புதிய புதிய கைத்தொழில் நிலையங்களை நிறுவுதல் ஊடாக வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளமுடிகிறது.

☆ குடும்பம் சார்ந்த நிறுவன மாதிரி தோற்றம் பெறல். கிராம அபிவிருத்தியும் வேலைவாய்ப்பும் கிராம மட்டம் தொடக்கம் நகர மட்டம் வரையிலான வேலைவாய்ப்பு சந்தர்ப்பத்தை அதிகரிக்கச் செய்யும்.

☆ முயற்சியாண்மைக் கல்வியைப் பட்டதாரிகளுக்கும், படித்த இளைஞர்கள், கிராமிய இளைஞர், கிராமிய மகளிர்க்கும், உடல் ஊனமுற்றோருக்கான கல்வி, சுயதொழிற் கல்வி என்பவற்றையும் வளர்த்தெடுத்தல்.

☆ பெற்றோர் மீது இளைஞர், யுவதிகள் தங்கிவாழும் நிலை இல்லாமல் செய்தல் வேலைவாய்ப்பின்மை பிரச்சினையை நிவர்த்தி செய்கிறது.

☆ பாடசாலை, பல்கலைக்கழகங்கள், ஆசிரியர் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் தொழில்நுட்பம் சார்பான புதிய கற்கை நெறியை ஆரம்பித்து பயிற்சி வழங்குதல்.

☆ Triple Trust Organization ஊடாக ஒடுக்கப்பட்ட மக்களின் தொழில்வாய்ப்பை அதிகரிக்கச் செய்தல்.

☆ அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வரும் சுய கைத்தொழில், குடிசைக் கைத்தொழிலாளரை விருத்தி செய்தல் தொடர்பாக செயற்பாட்டை பரவலடையச் செய்தல்.

**அட்டவணை 08**

| வருடம் | பயிற்சி அளிக் கப்பட்டவர் | வேலைவாய்ப்பு பெற்றுக்கொண்டவர் |
|---|---|---|
| 1997 | 163 | 147 |
| 1998 | 187 | 168 |
| 1999 | 2300 | 2300 |
| 2000 | 2800 | 2650 |
| மொத்தம் | 5430 | 5265 |

(மூலம்: பொருளியல் நோக்கு - 2000)

☆ புதிய வேலை வள ஆளணியினரைப் பயிற்றுவித்தல் ஊடாக வேலைவாய்ப்பை அதிகரித்தல் பின்வரும் அட்டவணை 08 இதனை காட்டுகிறது.

☆ அண்மைய காலத்தில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைவாய்ப்புத் திட்டங்களைத் துரிதப்படுத்தல்.

☆ தொழில் வாய்ப்புக்கான கடன் ஊக்குவிப்புத் திட்டங்களை வங்கி ஊடாகவும் சமுர்த்தித் தொழில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்குதல்.

☆ தொழில்நுட்பக் கல்லூரிகளினூடாகப் பயிற்சி அளித்து வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற ஒழுங்கமைத்தல். இதற்கு அண்மையில் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து 25பேர் முதல் தடவையாக அனுப்பிவைக்கப்பட்டமையை எடுத்துக்காட்டலாம்.

☆ வெளிநாட்டு வேலைவாய்ப்பை அரசு உரிய வகையில் ஒழுங்குசெய்து அத்தகைய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக நாட்டிலிருந்து வேலைவாய்ப்பு இடர்பாடும், அந்நிய வருமானப் பிரச்சினையைத் தீர்க்க சாதமாக அமையும்.

☆ கல்வித்திட்டத்தில் செயன்முறைசார்ந்த பாட ஒழுங்குத்திட்டமிடல் விடயங்கள் தொழில உலகுக்கு தயார்படுத்துவதாகவே அமைகின்றது. உதாரணமாக செயற்றிட்டம், செயற்பாட்டறை என்பன இதற்கு அடிப்படையாக அமைகிறது.

**அட்டவணை 9** — சமுர்த்தி தொழில் முயற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்

| வருடம் | தொகை ரூ.மில். | கடன்களின் எண்ணிக்கை | கடன்அறவீடு (%) |
|---|---|---|---|
| 1998 | 1,321.47 | 5378 | 98 |
| 1999 | 2,382.84 | 9238 | 75 |
| 2000 | 300.09 | 10601 | 75 |

(மூலம்: பொருளியல் நோக்கு - 2000)

☆ வழிகாட்டலும் ஆலோசனை சேவை விரிவுபடுத்தல். இதற்கு பாடசாலை அமைப்பிலும் நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்பினூடாகவும் தொழில்சார் ஆற்றுகை சமகாலத்தில் வலுப்பெற்று வருகின்றது எனலாம்.

☆ தொழில்சார் வழிகாட்டல் மையங்களை நிறுவுதன் ஊடாகத் தகுதி நிலைக்கு ஏற்ற

( ஆம் பக்கம் பார்க்க)

திரு.பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
ஆசிரியர்,
தீவகக் கல்வி நிலையம்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி, நுணாவில் மத்தி, கண்டி வீதியில் 4½ பரப்புக் காணியில் தனிக் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0773107026 (43083)

## ஆடு விற்பனைக்கு

மறி ஆடும் கிடாய்க் குட்டியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: புதிய இல.33, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி(தெற்கு) யாழ்ப்பாணம்(43093)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் (16-03-05) மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ் ஆனைகோட்டைச் சந்தி, P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, தாரகை முதலாம் கட்டை, பருத்தித்துறை, றஞ்சித் 517, ஸ்ரான்லி றோட், யாழ். T.P.: 222 - 3529, 222 - 2867 (43071)

## தலைமைத்துவப்பயிற்சி

பச்சிலைப்பள்ளி பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதி நிதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி வகுப்புகள் அண்மையில் நடைபெற்றன.

புலோப்பளை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்புக்களில் புலோப்பளை, கிளாலி, சங்கத்தார்வயல் ஆகிய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகத்தின் பணிப்பின் பேரில் மாவட்ட கூட்டுறவுப் பரிசோதகர் எஸ்.சிங்கநாயகம் இப்பயிற்சி வகுப்புகளை நடத்தியதாக பச்சிலைப்பள்ளி பிரதேச கடற்றொழிலாளர்சங்கங்களின் சமாசத் தலைவர் மெ.பிரான்சிஸ் தெரிவித்தார்.(எ-117)

## வெள்ளி விழா தொடர்பான செய்தி, படங்களில் திருத்தம்

நேற்றைய உதயனில் 5ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய - தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தொண்டர் சபையின் வெள்ளிவிழா தொடர்பான செய்தி மற்றும் படங்களுக்கான குறிப்பு என்பவற்றில் சில தவறுகள் இடம் பெற்றுவிட்டன எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வெள்ளிவிழா படங்களுக்கான குறிப்பில் நாட்டிய நிகழ்ச்சியை வழங்கும் மாணவிகள் 'யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீட மாணவிகள்' என்று இருப்பது தவறு ஆகும். அவர்கள் திருமதி ஆனந்தஜோதி ஸ்ரீ தர்ஷனனின் மாணவிகள் என்பதே சரியானதாகும்.

வெள்ளிவிழா தொடர்பாக வெளியாகியுள்ள செய்தியில் திருமதி ஆனந்தஜோதி ஸ்ரீ தர்ஷனன நுண்கலைப்பீட விரிவுரையாளர் என்று குறிப்பிடப்பட்டிருப்பதும் தவறு ஆகும். அவர் நுண்கலைப் பீட விரிவுரையாளர் ஸ்ரீதர்ஷனனின் துணைவி ஆவார்.

இந்தத் தகவல் தவறுகளினால சம்பந்தப்பட்டோருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அசௌகரியங்களுக்காக வருந்துகிறோம். (ஆ-ர்)

## முகாமையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல Guest House ஒன்றிற்கு முகாமையாளர் தேவை. சரளமாக ஆங்கிலம் பேச, எழுதக் கூடிய 25-40 வயதிற்குட்பட்ட A/L படித்த ஆண்/பெண் இருபாலாரும் மார்ச் 26,27 ஆம் திகதிகளில் காலை 10.00 மணி முதல் 1.00 மணிவரை நேரில்வரவும்.

(சிங்களம் பேசக்கூடியவர் விரும்பத்தக்கது).

**874, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(43057) (42-21-16-18)

## மையக் கிராமங்கள் தெரிவு

வலி.மேற்கு,மார்ச்15

'நியாப்' II திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு மையக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அராலிமத்தி, வட்டு. தெற்கு ஆகிய கிராமங்களே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இரண்டு கிராமங்களிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(எ-175)

ஸ்ரீராம ஜெயம்

## சிவாச்சார்ய அபிஷேகம் ஒத்திவைப்பு

பங்குனி 03 ஆம் நாள் நாளை (16-03-2005) புதன்கிழமை கொக்குவில ஸ்ரீ சாயிதுர்க்கை அம்பாள் ஆலயத்தில் நிகழவிருந்த பிரம்மஸ்ரீ இ.ரமணீதரசர்மாவின் சிவாச்சார்ய அபிஷேகம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பொற்பதி வீதி,
கொக்குவில். (43099)(21-18-16)

இங்ஙனம்
பிரம்மஸ்ரீ இ.இராமலிங்கசர்மா

## அரிய சந்தர்ப்பம்

**Hardware மற்றும் Network முடித்தவர்களுக்கானது**

Hardware Engineer's (Trainee)
Network Engineer's (Trainee)


எமது தாயக மண்ணில் வல்லுனர்களை உருவாக்கும் நோக்குடன் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

*சம்பளத்துடன் கூடிய முழுநேரப் பயிற்சி நெறி.*
*கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது.*
*முழு விபரங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.*

**UNIT**

347, KKS Road, Near by Manohara Theatre, Jaffna.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09.11.1938

மறைவு 08.03.2003

**வேலுப்பிள்ளை சின்னத்துரை**

(முன்னாள் கிராமசேவை நிர்வாக உத்தியோகத்தர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண மொழி பெயர்ப்பாளர்)

திதி : 15.03.2005

உண்மையின் காவலனே ...
நேர்மையின் உறைவிடமே ..
ஈராண்டு கடந்திடினும் -- எங்கள்
இரத்தபாசம் அடங்கிடுமோ
எங்கள் இதயமெல்லாம் ஏங்கித் துடிக்குதய்யா!
எம்மைத் தேற்றிட இருந்த
ஒரேயொரு நபர் நீயன்றோ
காலத்தின் கோலத்தினால்
காலன் அவன் கையில்
நீயும் சிக்கியதனால்
நாமும் துடிக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
உளமாரப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்*

தகவல்:
இ. தெய்வேந்திரம்
வீதி அபிவிருத்தித் திணைக்களம்
முல்லைத்தீவு.

சகோதரர்கள்:வே.தம்பையா, இ.பொன்னம்மா, க.பாக்கியம்.
மைத்துனி:மகாலிங்கம் மனோன்மணி
வாதரவத்தை, புத்தூர்.

(C/41479)(52-11-34-21)

## VACANCY ANNOUNCEMENT

**World Food Programme**

The Food Aid Organization of the United Nations

### Terms of Reference - Radio Operator (G3)

**The incumbent is based in Kilinochchi, servicing the telecommunications systems in the WFP Kilinochchi Sub Office. The incumbent will report to the ICT officer and will be responsible for the following duties:**

- Communication focal point for all WFP staff in the duty station.
- Track all WFP vehicle movement in the duty station, so that the locations of all vehicles/staff moving in the field are known.
- Monitor voice and data traffic on all UN radio network.
- Maintain a strict radio discipline, correct wrong use of procedures and as soon as possible report any irregularities relating to misuse or faults to the supervisor.
- Update call sign lists and other contact information for the WFP operation in the duty station regularly.
- Distributed information related to communication system is to all agencies.
- Maintain all ICT equipment used in the radio room and keep them in working order.
- Operate any data communication equipment used by WFP, satellite telephone (email and fax) etc.
- The radio network is monitored during working hours in addition to weekends and requires the person holding the post to work shifts and holidays when required.

**QUALIFICATION/EXPERIENCE:**

- Very good knowledge of English language both oral and written. Knowledge of additional languages would be beneficial.
- Experience with working with computers and using standard UN software (MS Office, Windows XP etc).
- Ability to work in a very stressful and hectic environment.
- The post requires a good sense of co-ordination and endurance. At times the environment in the radio room can be very stressing and demanding.

**Application will only be received in English. Only applicants called for interview will be contacted.**

**Deadline for applications 18th March 2005. CV should be delivered to WFP office, 873 Hospital Road, Jaffna.**

T.P/Fax 021 222 2086 (43100)(21-18-16)

## தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்ட பிரிவு நடத்தும்



சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் வளர்ச்சிக்காக
2 ஆவது எல்லைப்படை மாவீரர் நினைவான தங்கக்கேடயத்திற்கான

**மாபெரும் உதைபந்தாட்டம்**

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா மைதானத்தில் ஆரம்பம் ஆகின்றது
காலம்.நாளை (16-03-2005) புதன்கிழமை மாலை 3.00 மணி
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுமான 57 அணிகள் பங்குபற்றுகின்றன.
தொடர்ச்சியாக 27 நாள்கள் நடைபெறும் . ஆட்டத்தில் கால் இறுதி, அரையிறுதி,
இறுதி ஆட்டங்கள் மின்னொளியில் நடத்தப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

போட்டிக்குழு
யாழ்.மாவட்டம்.

ஊடக அனுசரணை: உதயன்

# ஆரோக்கியமான உடலில்தான் சிறப்பான உள்ளம் பிறக்கின்றது

## விளையாட்டு நிகழ்வில் பிரதிக்கல்விப்பணிப்பாளர் உரை

வட்டக்கச்சி,மார்ச்15

ஆரோக்கியமான உடலில் தான் சிறந்த உள்ளம் தோற்றம் பெறும். எனவே உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டியது மாணவர் ஒவ்வொருவருக்கும் அவசியமானதாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி வலய நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளா கி.சின்னராசா.

கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

நீண்டகாலக் கல்விப் பாரம்பரியமும் உலகளாவிய ரீதியில் இன்றும் சிலமாற்றங்களுடன் இடம்பெற்று வருகின்றது.

ஆரம்பகாலம் தொடக்கம் கல்வியில் விளையாட்டுக்கு பிரதான இடம் வழங்கப்பட்டு வருகின்றது. இன்று கலைத்திட்டததில் இணைப்பாட விதானமாக விளையாட்டு முககியத்துவப்படுத்தப்பட்டுள்ளது. மேன்மை பெற்ற உள்ளத்தை தோற்றுவிக்கத் தேவையான ஆரோக்கியமான உடலைப் பேணுவதற்கு ஒவ்வொருவருக்கும் விளையாட்டு அவசியம்.

எமது மாணவர் விளையாட்டுப் போட்டி முடிந்தவுடன் முழுமையாகப் பாடங்களுக்குள மூழ்கிவிடுவார்கள். அடுத்த ஆண்டு விளையாட்டுப் போட்டியிலேயே மீண்டும் விளையாட்டுக்களை ஆரம்பிப்பார்கள்.

இதனை விடுத்து மாணவர்கள் ஒவ்வொரு நாளும் தமக்குப்பிடித்தமான விளையாட்டுக்களில் பயிற்சிபெற்று பாடசாலை மட்ட, வலய மட்ட, மாவட்டமட்ட வெற்றிகளை மட்டுமன்றி மாகாணமட்ட, தேசிய மட்டப்போட்டிகளிலும் வெற்றி பெற்றுத் தமக்கும் பாடசாலைக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் - என்றார். (த-405)

# மூதாளர் பேணலகத்துக்கு சூரிய மின்கலம் அன்பளிப்பு

பொருண்மிய மதியுரையகத்தினால் யு.கே.ரெக் நிறுவன நிதியுதவியுடன் கடந்த 12ஆம் திகதி காலை 11 மணியளவில் அன்புச்சோலை மூதாளர் பேணலகத்திற்கு மூன்று சூரிய மின்கலங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்விற்கு மூதாளர் பேணலகத்தின் நிர்வாக இயக்குநர் தலைமை தாங்கினார். மங்கள விளக்கினை மாவீரரின் தந்தை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியினை அன்புச்சோலையின் பொறுப்பாளர் பரஞ்சோதி ஏற்றிவைத்தார்.

பின்னர் யு.கே.ரெக்கின் பிரதிநிதி விஜய தேவா சூரியமின்கல உபகரணங்களை வைபவ ரீதியாக கையளித்தார் யு.கே. ரெக்கின் பிரதிநிதி விஜயதேவா சிறப்பு உரையாற்றினார். (த)

## சிறப்புற நடைபெற்ற மெய்வன்மைப்போட்டி

வட்டக்கச்சி,மார்ச்15

கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப போட்டி கடந்த 12ஆம் திகதியில் சிறப்பாக நடைபெற்றது.

பி.ப.1.30 மணியளவில் வித்தியாலய அதிபர் க.இரத்தினகுமார் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக கிளிநொச்சி கல்விவலய நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர் கி.சின்னராசா கலந்து கொண்டார்.

விளையாட்டு நிகழ்வுகளைத் தொடர்ந்து மாணவர்களுக்கான பரிசில்கள் சான்றிதழ்கள் வெற்றிக்கிண்ணங்கள் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. (த-405)

## புதுக்குடியிருப்பு தபாலகத்தில் முத்திரை தட்டுப்பாடு

புதுக்குடியிருப்பு,மார்ச்15

புதுக்குடியிருப்பு உபதபாலகத்தில் முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் மக்கள் முத்திரைகள் வேண்ட தனியார் கடைகளை நாடவேண்டியுள்ளது. மக்கள் செறிந்துவாழும் இப்பிரதேசத்தில் 2கிலோமீற்றர் தூரத்திலேயே உபதபாலகமும் இயங்கி வருகிறது.

சிரமங்களிற்கு மத்தியில் மக்கள் பிரயாணம் செய்தும் முத்திரைகளைப் பெறமுடியாதுள்ளது.

உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுத்து முத்திரைகளைப் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-353-204)




## சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

புதுக்குடியிருப்பு,மார்ச்15

முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட நடமாடும் பெண்கள் பயிற்சி நெறியில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு கடந்த வாரம் பாலிநகர் அந்தோனியார் சிறுவர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

முலலைத்தீவு மாவட்டத்தில் வடக்கு- கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் அமைச்சின் நிதி உதவியுடன் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி சி.சண்முகவடிவேல் தலைமை வகித்தார்.

பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் பாலிநகர் கொல்லவிளாங்குளம் கிராம அலுவலர், பாலிநகர் சனசமூக நிலையத்தலைவர் ஞா.தயாளசீலன், பாண்டியன்குளம் அரசியல்துறைப் பொறுப்பாளர், ஆசிரியர்கள், கழக அங்கத்தவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-353-204)

# வீறுகொண்டு எழுந்த தமிழீழப் பெண்களால் இங்கு பிறந்த அனைவருக்கும் தலை நிமிர்வு

## மகளிர்தினச் செய்தியில் முல்லை. அன்னையர் முன்னணி

புதுக்குடியிருப்பு,மார்ச்15

வீறுகொண்டெழுந்த தமிழீழ பெண்களால் இங்கு பிறந்த அத்தனைபேருமே பெருமைப்பட்டு தலையைநிமிர்த்தி வாழமுடிகிறது.

சர்வதேச பெண்கள் தினம் தொடர்பாக முல்லை மாவட்ட அன்னையர் முன்னணி வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பெண் என்பவள் புதுமையானவள்தான். எந்தப் பெரிய துயரங்களையும் தனது இனிய பேசசால், புன்னகையால், அரவணைப்பால், நொடிப பொழுதில் துடைத்தெறியச் செய்யும் ஆற்றல் மிக்கவள்பெண். கணவன் எட்டு மணித்தியாலங்கள் வேலை செய்யும்போது குடும்பத்திலே மனைவி பதினெட்டு மணித்தியாலங்கள் வேலை செய்கின்றாள்.

குடும்பத்திலே சகலரது தேவைகளையும் அவளே பூர்த்தி செய்கின்றாள். எல்லோரினதும் தேவைகள், குறைபாடுகள், பிரச்சினைகள், சகலத்திற்கும் ஈடுகொடுத்து தேற்றி ஆறுதல் அடையச் செய்கின்றாள். அத்தனைக்கும் அவளிடம் இயற்கையாய் அமைந்து புதுமைப் படைப்பு விதியே காரணம்.

மலைபோன்ற துயரத்தையும் ஒரேயொரு பாசமுத்தத்தாலும், அரவணைப்பாலும், இன்சொல்லாலும், தூர விரட்டியடிக்கும் உன்னத சக்திபெண்ணிடமே அமைந்துள்ளது. இதிலே பெரியதோர் அதிசயம் என்னவெனில் பெண்குலமே தனது திறமையை, மகத்தான சக்தியை உணராமல் இருப்பதுதான்.

அன்று பாரதியால் பெண்ணின விடுதலைக்காக இடப்பட்ட வித்து இன்று தமிழீழத்திலே பெரியதொரு விருட்சமாகி ஆழவேர்விட்டு அகலக்கிளை பரப்பி முழுமைபெற்று விளங்குவதற்கு முக்கிய சக்தியாக விளங்குபவர் எமது தலைவர்தான் என்பதை மறுக்கவோ அன்றி மறைக்கவே எவராலும் முடியாது.

தமிழீழப் பெண் இன்று ஆயுதத்தை ஏந்தி பகைவர் படையணியினை எமது எல்லையிலே கால் பதிக்கவரும் எதிரியை ஓட ஓட விரட்டுகின்றாள். ஆழ்கடலிலும் ஆச்சரியப்பட வைக்கும் விதத்தில் தமிழீழ மானம் காக்கத் தலை நிமிர்ந்து நிற்கின்றாள்.

அது மட்டுமா அரசியலில் அகில உலகமே வியக்கும் வண்ணம் உயர்ந்து நிற்கின்றாள். தரணியெல்லாம் தன்பணிக்குச் செல்கின்றாள்.

தமிழீழப் பெண் வீறுகொண்டெழுந்து வீர விடுதலைப் புலியாய் மாறித் தமிழனத்தைக் கூறிட எண்ணும் கொடியவர் கூட்டத்தைக் குதறிடும் துணிச்சல் பெற்றுள்ளாள். தமிழீழப் பெண்ணால் தமிழீழத்திலேயே பிறந்த அத்தனை பேருமே பெருமைப்பட்டுத் தலையை நிமிர்த்திக் கொள்கின்றோம். இனியும் அடிமையாய் மற்றவர்களுக்குச் சுமையாய் வாழ்வதை விடுவோம் தலைவர் காட்டும் வழியில் தலை நிமிர்வோம் என்றுள்ளது. (த-353)

## மல்லாவியில் மகளிர் தினம்

புதுக்குடியிருப்பு,மார்ச்15

சர்வதேச மகளிர்தின நிகழ்வுகள் கடந்த 8 ஆம் திகதி மல்லாவி வண்ணன் விளையாட்டு கழகத்தில் நடைபெற்றன.

மல்லாவிப் பிரதேச அன்னையர் முன்னணித் தலைவி விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முதந்தன், வானதி வெளியீட்டகத்தை சேர்ந்த தமிழவள் ஆகியோரின் சிறப்புரைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து மகளிர்தின நிகழ்வை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

மகளிர்கலை பண்பாட்டுக்கழகத்தினரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (த-353)

# புதுக்குடியிருப்பு மாணவருக்கு வீதி ஒழுங்குக் கருத்தூட்டல்

புதுக்குடியிருப்பு,மார்ச்15

தமிழீழக் காவல்துறையினரால் புதுக்குடியிருப்புப் பகுதி பாடசாலைகளில் மாணவர்களுககான வீதி ஒழுங்கு கருத்தூட்டல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய புதுக்குடியிருப்பு காவல் பணிமனையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.பிரதீப்குமாரினால் கடந்த 9ஆம்திகதி கொக்கிளாய் தமிழ் கலவன் பாடசாலையிலும் 11ஆம் திகதி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விதிகள் பற்றிய கருத்தூட்டல்கள் நடத்தப்பட்டன.

அண்மைக்காலத்தில் புதுக்குடியிருப்பு பகுதிகளில் சில பிரதான வீதிகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் வாகனப்பாவனையும் பல மடங்கு அதிகரித்தும் காணப்படுகின்றது.

இதனால் வீதிவிபத்தில் இருந்து பொது மக்களையும் முக்கியமாக மாணவ சமூகத்தையும் காப்பதற்காக இப்படியான முற்காப்பு நடவடிக்கைகளில் காவல்துறையினர் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர். (த)



கடந்த 5ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கியின் நடமாடும் இரத்ததான முகாம் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் நடைபெற்றது. நிறுவனநிர்வாக உத்தியோகத்தர் கு.சேரன் இரத்தம் வழங்கி அதனை ஆரம்பித்துவைப்பதை முதலாவது படத்திலும் மாணவர்கள், விரிவுரையாளர்கள் இரத்ததானம் செய்வதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

(படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் மூலம் தொண்டாற்றும்
திரு.தா.நாகலிங்கம் அவர்களின் அருமை மனைவி

### செல்லம்மா

அவர்கள் 12-03-2005 இல் காலமான செய்தியால் துயருறுவதோடு, அன்னாரின் பிரிவால் வருந்தும் குடும்பத்தினருடன் இணைந்து துயாபகிர்வதோடு, அன்னையின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

புங்குடுதீவு. (43106)(26-11-18)

அருள்மிகு அந்தோனியார்
தெய்வக் குழந்தைகள் இல்லம்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
14
-
12
-
1937



உதிர்வு
08
-
03
-
2003

### அமரர் சின்னையா துரைசிங்கம்

பாசமுடன் வாழ்ந்த
பசுமையான நினைவுகள்
காலங்கள் பல கடந்தும்
கலையாத கனவுகளாய்
எம் கண்களோடு கலந்து இருக்கும்

தற்காலிக முகவரி:
கோண்டாவில் றோட்,
இருபாலைச் சந்தி.
(43105)(26-11-18)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## OLD BOYS' ASSOCIATION
## ST. PATRICK'S COLLEGE - JAFFNA
## ST. PATRICK'S DAY - 17th MARCH 2005

PROGRAMME:

TRIDUUM: 14th, 15th and 16th at 5.30 p.m.
FESTIVAL EUCHARIST IC SERVICE
ON THE 17th at 7.15 a.m.
AT THE COLLEGE CHAPEL
O.B.A. GET TOGETHER AND TEA AT 5p.m.
ON 17.03.2005
AT MATHURAM SQUARE
MEMBERS OF THE O.B.A. ARE CORDIALLY INVITED

NO. 59, ST. PATRICK'S ROAD,
JAFFNA. (43104)(26-11-18)

**GEN. SECRETARY,**
**O.B.A. - S.P.C. JAFFNA.**

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் தினகரிப்பிள்ளை



(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அல்வாய், வட்டுவத்தையைப் பிறப்பிடமாகவும் வதிரி, புலவரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தினகரிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்கள் நேற்று (14.03.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வல்லிபுரம் - செல்லாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வ.ஆறுமுகம் (முன்னாள் அதிபர்), வ.கதிரித்தம்பி (முன்னாள் அதிபர்), க.சின்னத்தங்கம், செல்லாச்சி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கருணானந்தன் (U.K.), தேவபாலன், கமலநாதன் (கனடா), திருமதி த.கமலாம்பிகை (ஆசிரியை, யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பூ.தவநாதன் (ஆசிரியர், யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), திருமதி க.பகீரதி (U.K.), திருமதி தே.சுகுணராணி, திருமதி க.வித்தியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கருஷான், சாகரி, தாஷயன், தர்சிகா, அஸ்வினி, விதுஜா, விதுஷன் ஆகியோரின் அன்புப பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புலவரோடை,
வதிரி, கரவெட்டி (43114)(32-11-18-26)

தகவல்: தி.தேவபாலன் *(மகன்)*,
ச.தவநாதன் *(மருமகன்)*.

## சுவிஸ் நிறுவனத்தின் அபிவிருத்திப் பணிகள்

தென்மராட்சி,மார்ச்15

சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

யுத்தத்தினால் சேதமடைந்த நான்கு வகுப்பறைத் தொகுதிகள் மற்றும் பழைமை வாய்ந்த கிணறு ஆகியவற்றைப் புனரமைத்துள்ளதுடன் வித்தியாலயத்திற்கு மதில் அமைத்து இரும்புக் கதவு பொருத்தியுள்ளதாகவும் வித்தியாலய அதிபர் கு.கதிர்காமசேகரர் தெரிவித்தார்.

(எ-117)

## சமூக வலுவூட்டாளர் தெரிவு

வலி.மேற்கு,மார்ச்15

யாழ்.மாவட்டத்தில் நியாப் II திட்டத்தின் கீழ்தெரிவுசெய்யப்பட்ட 25 மையக் கிராமங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு 13 சமூக வலுவூட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(எ-175)

## தொழில்சார் திட்ட....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் வாய்ப்பைப்பெற வாய்ப்பாக அமையும்.

☆பெண்களுக்கான தொழில் முயறசியாண்மையை அதிகரிக்கச் செய்தல். இதற்கு தொழில் முயற்சியாண்மை வளநிலையங்களைக் கட்டியெழுப்பிப் பயிற்சி வழங்குதல்.

☆ வெளிநாட்டு தொழில்சார் பயிற்சியாளர்களைக்கொண்டு விசேடபயிற்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தல்.

☆ எமது நாட்டு தொழில் அதிகாரிகள் வெளிநாடுகளில் உள்ள வேலைவாய்ப்புப் பணியகங்களில் பயிற்சி பெறவும், சுற்றுலா செய்யவும் வாய்ப்பளித்தல்.


### முடிவுரை

இவ்வாறான பல்வேறு தொழில்சார் முயற்சித் திட்டங்களை கல்வியமைப்பு வேலைத்திட்ட ஒழுங்கமைப்பு என்ற அடிப்படையில் சமூக மட்டத்தில் முன்னெடுக்கின்ற பொழுது வேலையில்லாப்பிரச்சினை அதிகரிக்க வாய்பபுக் குறைவதுடன், நாட்டின் ஒற்றுமையை விரிவடையச் செய்கின்ற முரண்பாடுகள் தோன்றுவதும் குறைவடைகிறது. அத்துடன், அரச நிறுவனத்தில் வேலைவாய்ப்பு பெறவேண்டும் என்ற மனநிலை இன்றிச் சுய்தொழில் தேடல், சுதேச தொழில் துறை விருத்தி, தனியார்துறை தொழில் விருத்தி என்ற அடிப்படையில் மக்களின் நாட்டம் அதிகரிக்கவும் வாய்ப்பாகும்.

★

## NET NET NET NET NET NET

34, Saddanathar Road, Nallur , Jaffna. T/P : 021-2223786,0777-708498







CADDY SHACK கணனிகளின்
வட கிழக்கு ஏக விநியோகஸ்தர்கள்!

PII 300MHz/64Mb RAM/2.5GBHDD/ (14,900/=)
PII 333MHz/64Mb RAM/3.2GB HDD (15,500/=)
PII 350MHz/64MB RAM/4.2GB HDD (18,900/=)
PIII 450MHz/64MB RAM/6.4GB HDD (24,500/=)
PIII 500MHz/64MB RAM/6.4 GB HDD (25,400/=)
PIII 550MHz/64MB RAM/6.4 GB HDD (25,900/=)
PIII 600MHz/64MB RAM/6.5 GB HDD (26,000/=)

ATX-C8001 4IN1
(WITH 1.44MB FDD/VGA/CD ROM/SOUND
15"DIGITAL COLOUR MONITOR/ KEY BOARD
& MOUSE)




முதன் முறையாக யாழ் மண்ணில் எம்மிடம் மொபைல் இணைப்புக்களைப் பெற்ற சகல வாடிக்கையாளர்களிற்கும் ஓர்அரிய சந்தர்ப்பம்

ABANS ன் வட கிழக்கு விநியோகத்தர் எம்மிடம் ஒரு மொடல் மட்டுமல்ல! உலக பிரசித்தி பெற்ற சகலவிதமான Mobile Phones களையும் பெற்றுக்கொள்ளலாம்.




North East Telecom

எம்மிடம் சகல வித கணனி திருத்த வேலைகள் மற்றும் மொபைல் திருத்த வேலைகள் வீடுகளிற்கு வந்தும் செய்து கொடுக்கப்படும்.



எம்மிடம் புத்தம்புதிய கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் தொகையாக வாங்குபவர்களிற்கு விசேட கழிவுகள் !

வட கிழக்கு தொழில் நுட்பம் **North East Technologies (Pvt) Limited**

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் தெற்கு லோட்டன் வீதியில் 5 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :
**021 - 222 3861, 077 6660464**
சந்திக்கும் நேரம் மாலை 4.00 - 6.00 மணி வரை.
(43108)(21)

## வேலையாள்கள் தேவை

கைற்றோலிக் பிறஸ் மெசினில் வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை. பயிலுநருக்கு N.A.B. ஊடாகப் பயிற்சி வழங்கப்படும் (முன்அனுபவம் உள்ளவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவர்).
நேரில் வரவும்.

சந்திக்கும் நேரம்: 9.00 மணி
தொடக்கம் 5.00 மணி வரை

**செல்வா ஹாட்வெயர்ஸ்**
120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-414420)

## IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna

### BIT
### விரிவுரைகள் ஆரம்பம்

1ம். 2ம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் ( 2ஆம். 4ஆம் அரையாண்டுகள் ) 19.03.2005 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

யாழ் மாவட்டத்திலிருந்து BIT கற்கை நெறியை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களும் இவ்விரிவுரைகளில் இணைந்து கொள்ளலாம் என்பதை அறியத்தருகிறோம்.

இயக்குநர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

**நீங்கா நினைவுகளுடன் ஐந்தாம் ஆண்டு**

## அமரர் சிவக்கொழுந்து சீனிவாசகம்



உயிராகி 25.07.1934 உதிரவாகி 10.03.2000

கண்ணை இமை காப்பது போல் காத்தெம்மை
பூவுலகில் வாழவைத்துவிட்டு
கதறி அழவிட்டுப் பிரிந்து - நீங்கள்
விண்ணுலகு சென்று இன்று ஐந்தாண்டுகள்
பொழுது புலர்வேளை பூக்கொய்து வைத்து
நின்று தொழுகின்றோம் - என்றாலும்
துயர் துயரே தானப்பா!

என்றும் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

62, புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 20 07 1944 — விண்ணில் 13 02 2005



பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பால் நகர், வவுனிக் குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

**சிவசம்பு முருகையா** (ஓய்வுபெற்ற ஊழியர் மின்சார சபை)

இல்லத்தின் விளக்காக இதயங்களின் துடிப்பாக
உயர்வுக்கு ஏணியாக உறவுகளின் விழுதாக வாழ்ந்திருந்த
எம் ஆருயிர்த் தெய்வமே!
நிலைதடுமாறி நிற்கும் எங்களுக்கு
ஆறுதல் தந்திடுவீர் என்றுமே.!

அன்னாரின் ஆத்மசாந்திக்காக வேண்டுவதுடன் இன்று (15.03.2005) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நினைவு வழிபாட்டிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தரமுகவரி: பன்னாலை, தெல்லிப்பழை.
தற்காலிக முகவரி: முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

பாசமிகு மனைவி,
பிள்ளைகள்.

(43092)(52-16-18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 11 03 1959 — மறைவு 13 02 2005



திருமதி
**சறோஜாதேவி திருச்செல்வம்**

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமானவரே
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி!

இன்று (15.03.2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

சி.திருச்செல்வம்
குடும்பத்தினர்.

(43097)(51-18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 05 08 1916 — இறப்பு 13 02 2005



திருமதி
**வல்லிபுரம் கதிராசிப்பிள்ளை**

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு உடன் சகல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு -

இன்று (15.03.2005) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணிக்கு நல்லூர் சட்டநாதர் கோயில் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறுகின்ற அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வ. பத்மநாதன் - மேலதிக காணிப்பதிவாளர்
வ. சத்தியசீலன் - உதவித்திட்டப் பணிப்பாளர்.
வ. மகாலிங்கம் - தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்.

நாமகள் வீதி,
கொக்குவில் கிழக்கு.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(43098)(55-11-18)

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
### உடற்கல்வி டிப்ளோமா

உடற்கல்வி டிப்ளோமாவின் இரண்டாம் வருட முதற் பருவத்திற்கான கற்கைநெறி (ஆறாவது அணி), 2005.03.16 காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகின்றது. அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் யாவரும் உடற்கல்வி விஞ்ஞான அலகிற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

- துணைவேந்தர்.

(சி-41496)(29-14-17)

### THE ROYAL COLLEGE OF JAFFNA

கட்டணம் 1000/= ரூபாவுடன் ஆறு மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில

By: விக்னேஸ்வரன் ஆச்சாரி
426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்

### தென்னம் நாற்றுக்கள் விற்பனைக்கு

பூநகரி ப.நோ.கூ. சங்கத்தில் நல்லின தென்னம் நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு.

விலை ரூபா 35/=
தொடர்பு: T.P. 0777 238422

## மரண அறிவித்தல்

திருமதி
### சதாசிவம் இராசம்மா

சரசாலை தெற்கைச் சேர்ந்த திருமதி சதாசிவம் இராசம்மா நேற்று (14.03.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும் நவமணி (உதவிக் கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், வவுனியா), சிவலிங்கம் (பதிவாளர், இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு), ஞானலிங்கம் (அதிபர், யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்), ஜெயமணி (அதிபர், யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.ஞானலிங்கம் J.P.
(மகன் - அதிபர்).

*"சிவகிரி"*
*சரசாலை தெற்கு,*
*சாவகச்சேரி.*

(43134)(29-14-17)


**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்)
மற்றும் பலர் நடித்த

**மாயாவி** (சினிமா)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்.

14.03.2005 முதல்
பிரசன்னா-ஸ்ருதராஜ்-வடிவேலு-அனுசேகர் நடிக்க

**காதல் டாட் காம்**

எமது அடுத்த வெளியீடு இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு தாவடி மைந்தன் நடிக்கும்

**குருதேவா** விரைவில் எதிர்பாருங்கள்.

(C/41480)

காட்சி நேரங்கள்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த

**லண்டன்** (சினிமா)

இயக்கம்: சுந்தர் C

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

விஜய், திரிஷா நடித்த

**திருப்பாச்சி**

காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே.)

(C/41377)(29-16-17)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

சரத்குமார், நமிதா, வடிவேல், கபாலி நடித்த



**ஏய்** (சினிமா)

தினசரி
11.00. 3.00. 7.00 (பு.நே)


---


## வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேவை

(20 பேர்)

தகுதி, திறமை முக்கியம்
தகைமை: க.பொ.த. உயர்தரம் சித்தி
வயது: 20-30

இருபாலார்

சம்பளம்: 4000/= + கமிஷன்
(மோட்டார்ச் சைக்கிள் வழங்கப்படும்)
சுயவிவரத்துடன் நேரில் வரவும்.

**TWinnKle Star**

360/5, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்),
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (43116)(29-14-17)


## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
**தேவராசா தேவகுமார்**
(சிந்தன்)

சிந்தனை நமக்கென்றிருந்தோம் !
வஞ்சனை செய்தான் யமனோ?
நெஞ்சினில் உரம் கொண்டோனே!
தஞ்சமென குளத்தைக் கண்டாய்
எரியுதடா எமது நெஞ்சம் !
தெரியுதடா உனது முகம் எங்கள்
முன்னே!
ஓம் சாந்தி ! சாந்தி ! ஓம் சாந்தி!

-பழவத்தை இளைஞர்கள்.

தாயின் மடியில் 07 -10 -1991 — நீரின் பிடியில் 16- 12 -2004

வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

(43123)(29-14-17)

## மரண அறிவித்தல்கள்

### நீக்கிலாப்பிள்ளை சுவாம்பிள்ளை



இளவாலை, மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்ட நீக்கிலாப்பிள்ளை சுவாம்பிள்ளை 12.03.2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் நாளை (16.03.2005) புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு மாரீசன்கூடல், புனித கயித்தார் ஆலயத்தில் திருப்பலியுடன் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வண.பிதா ஸ்ரனி (மகன்)
(ஜெறோம் - அ.ம.தி.)

*இளவாலை.* (43133)(29-14-17)

### குருசாமி ஐயர் சிவஞானக்குருக்கள்

(கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் நித்தியக் குருக்கள்)



கைதடி வடக்கைச் சேர்ந்த குருசாமி ஐயர் சிவஞானக் குருக்கள் 2005-03-13 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் திருமதி நடராஜ ஐயர் கமலாம்பிகை அம்மாவின் பேரனும் காலஞ்சென்ற குருசாமி ஐயர் ஞானாம்பிகை அம்மாவின் அன்பு மகனும் ஜெயலக்ஷ்மியின் அன்புக் கணவரும் தியாகராஜ ஐயர் இரத்தினேஸ்வரி ஆகியோரின் மருமகனும் சிவனேஸ்வரி, சிவகுமாரசர்மா (கிராமிய வங்கி - கைதடி), சிவசக்தி, சுந்தரசர்மா (ஆசிரியர் - வவுனியா) ஆகியோரின் சகோதரனும் பாஸ்கரன், தனலட்சுமி அம்மா (ஆசிரியை - கொக்குவில் இந்துக் கல்லூரி), புஸ்பராஜ சர்மா, திருவேணி, பத்மநாதன், பத்மாவதி, இராஜசேகர சர்மா, ஸ்ரீதரன், நடராஜசர்மா, சுகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2005) செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு கைதடி கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கைதடி கிழக்கு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*வீரகத்திப்பிள்ளையார் கோயிலடி,*
*கைதடி கிழக்கு, கைதடி.* (43125)(29-14-17)

தகவல்:
தாய், மனைவி.

### அமரர் பொன்னம்பலம் கனகராசா (துரை)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் **G.P.S. Road**, கல்வியங்காட்டை வதிவிடமாகவும் தற்போது ஜேர்மனியில் வசித்து வந்தவருமாகிய பொன்னம்பலம் கனகராசா அவர்கள் 09.03.2005 புதன்கிழமை அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற மகாலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான K.P.செல்லையா (தருமர், **Raja Rice Mill**), கார்த்திகேசு, ராசலிங்கம் (ஓவசியர்) ஆகியோரது பாசமிகு சகோதரரும் யோகேஸ்வரி (யோகா - கனடா), சிவபாலன் (ஜேர்மனி), கலைச்செல்வி (நோர்வே), மலர்வதனி (ரதி - ஜேர்மனி) ஆகியோரது பாசமிகு தந்தையும் ஸ்ரீரங்கநாதன் (கனடா), சுடர்விழி (ராஜி - ஜேர்மனி), ஈஸ்வரராஜா (நோர்வே), ஸ்ரீரஞ்சன் (ஜேர்மனி) ஆகியோரது அன்பு மாமனாரும் தாட்சாயினி, கோபி, சிந்துஷா, நஷானி, ஜனனி, றாஜினி, வர்மன், நர்த்தனா, கீர்த்தனா, அர்ச்சனா ஆகியோரது பாசமிகு பேரனும் மகேஸ்வரி ராமநாதபிள்ளை, சிவசோதிப்பிள்ளை பொன்னுத்துரை ஆகியோரது அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் (ஜேர்மன் நேரம்) ஜேர்மனியில் இடம்பெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*மைலு வீதி,*
*ஆறுகால்மடம்,ஆனைக்கோட்டை.* (43122)(29-14-17)

தகவல்:
ப.கண்ணன் (பேரன்).

# ஹர்த்தால் மற்றும் மறியல் போராட்டங்களால்

# திருமலையில் நேற்று இயல்புநிலை பாதிப்பு

திருகோணமலை,மார்ச்15

நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலும் ஆங்காங்கே மக்கள் நடத்திய மறியல் போராட்டங்களாலும் மாவட்டம் முழுவதும் செயலிழந்தது. அரச அலுவலகங்கள் இயங்கவில்லை. போக்குவரத்துக்கள் முற்றாகத் தடைப்பட்டன.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளில் அரசு செயற்படும் விதத்தைக் கண்டித்தும் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான திட்டமிட்ட இனவாத நடவடிக்கைகளை எதிர்த்தும் தமிழ் - முஸ்லிம் மக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்தினர். தமிழ் மக்கள் பேரவை இந்தப் போராட்டத்திற்கு அழைப்புவிடுத்திருந்தது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமக்கு நிவாரணம் வழங்குவதில் அரசு காட்டும் பாரபட்சத்தைக் கண்டித்தும் சர்வதேச சமூகம் வழங்கிய நிவாரண உதவிகள் தமக்குச் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படாததைக் கண்டித்தும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் சிறுபான்மை மக்களுக்கு எதிராகத் திட்டமிட்ட அடிப்படையில் நடத்தப்படும் இனவாத நடவடிக்கைகளைக் கண்டித்தும் தமக்குரிய நிரந்தரத் தங்குமிடங்களை இதுவரை அமைத்துத் தருவதில் காட்டப்படும் அசமந்தப் போக்கைக் கண்டித்தும் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படும் பெரும்பான்மையினரின் குடியேற்றங்களைக் கண்டித்தும் மேற்படி போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்தால் திருகோணமலை நகரப்பகுதி, மூதூர்கிழக்கு, கிளிவெட்டி, மல்லிகைத் தீவு, வெருகல், ஈச்சிலம்பற்று, தம்பலகாமம், கும்புறுப்பிட்டி சல்லி உட்படப் பல பிரதேசங்கள் முற்றாகச் செயலிழந்தன.

ஆங்காங்கே வீதிகளுக்கு இறங்கிய மக்கள் மறியலில் ஈடுபட்டனர். நடு வீதியிலேயே கூடாரம் அமைத்து அமர்ந்த மக்கள் அங்கேயே அடுப்பு மூட்டி கிடாரங்களை வைத்துச் சமைக்கவும் ஆரம்பித்தனர்.

ஆழிப்பேரலையால் சேதமடைந்த வள்ளங்கள் மற்றும் மரங்களை வீதிக்குக் குறுக்கே போட்டு போக்குவரத்தைத் தடைசெய்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களின் கோரிக்கைகள் எழுதப்பட்ட சுலோக அட்டைகள் ஆங்காங்கே தொங்கவிடப்பட்டிருந்தன.

பத்தாம் குறிச்சி, பள்ளத்தோட்டம், என்.சி. வீதி, மூன்றாம் கட்டை, அலஸ் தோட்டம் எனப் பல்வேறு இடங்களில் வீதியை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது குறைகளைக் கேட்க அரச அதிபர் அங்கு வரவேண்டும் என்று பத்தாம் குறிச்சியில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினர். இதை அடுத்து திருமலை மாவட்ட அரச அதிபர் காமினி றொட்றிக்கோ, உதவி அரச அதிபர், உதவிப்பிரதேச செயலர் ஆகியோர் அங்கு வருகை தந்தனர்.

தங்களுடைய பிரச்சினைகள் குறித்து அவர்களுக்கு மக்கள் நேரில் விளக்கினர். தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ.விக்னேஸ்வரன் பொதுமக்களின் தேவைகள், பிரச்சினைகள் குறித்தும் அதிகாரிகளுக்கு விளக்கினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2 வார காலத்துக்குள் வேறு பகுதியில் வீடுகள் அமைத்துத் தருவதாகவும் உரிய நிவாரணங்கள் பெற்றுத் தருவதாகவும் இனவாத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவதாகவும் அரச அதிபர் அங்கு மக்களுக்கு உறுதியளித்தார்.

இரண்டு வாரகாலம் அல்ல ஒரு மாத கால அவகாசமே தருகின்றோம். அதற்குள் வீடுகள் அமைத்துத் தரப்படவில்லையாயின் மாவட்டம் தழுவிய தொடர் போராட்டம் நடத்தப்படும் என விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

போராட்டக்காரர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களும் அரச அதிபரிடம் வழங்கப்பட்டன. ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், மாகாண ஆளுநர் ஆகியோருக்கு அவை 'பக்ஸ்' மூலம் அனுப்பிவைக்கப்பட்டன.

அரச அதிபரின் உறுதிமொழியை அடுத்து மறியல் போராட்டங்கள் நண்பகலுடன் கைவிடப்பட்டன. எனினும், காலையில் ஆரம்பிக்கப்பட்ட ஹர்த்தாலால் நகரும் அதனை அண்டிய பகுதிகளும் தொடர்ந்து இயல்பு நிலையை இழந்திருந்தன.

(க-3)

## புறக்கோட்டையில் கடையடைப்பு

கொழும்பு,மார்ச்15

அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர்களும் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து புறக்கோட்டை வர்த்தகர்களும் திட்டமிட்டபடி நேற்று அடையாளக் கடையடைப்புப் போராட்டத்தை நடத்தினர்.

புறக்கோட்டைப் பகுதியில் காலை முதல் கடைகள் எவையும் திறக்கப்படவில்லை. துறைமுகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய கெடுபிடிகளைக் கண்டித்து சுலோக அட்டைகளை ஏந்தியபடி வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றையும் நடத்தினர்.

கடையடைப்பு ஆர்ப்பாட்டத்தின் எதிரொலியாக கிழங்கு, வெங்காயம் என்பவற்றை ஏற்றி வந்த கொள்கலன்களை மட்டும் துறைமுகத்திலிருந்து உடனுக்குடன் எடுத்துச்செல்ல ஏற்பாடுகள் செய்யப்படும் என சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஜயதிலக்க உறுதியளித்தார்.

(க-8)

## பொதுக்கட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான அரசின் யோசனைகள் இறுதியாக கடந்த 7ஆம் திகதி நோர்வே அனுசரணையாளர்களிடம் கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் இது சம்பந்தமான உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. அப்படியான தகவல் கிடைத்த பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கையை நாம் மேற்கொள்ள முடியும்" - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக நோர்வேத் தரப்பு சமர்ப்பித்த திட்ட யோசனையைத் தமது அமைப்பு ஏற்றிருப்பதாகவும் -

அரசுத் தரப்பின் நிலைப்பாடே இன்னும் தெரியவரவில்லை எனவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-3)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் நாடாளுமன்றம், இராணுவத்தலைமையகம் மற்றும் பொருளாதார கேந்திர ஸ்தானங்களைத் தாக்கக்கூடும் .

எனவே, இந்தியாவுடன் விரைந்து பாதுகாப்பு உடன்படிக்கையொன்றைச் செய்து புலிகளை அடக்கவேண்டும்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப்பணிகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. மக்களுக்குரிய நிவாரணங்கள் இன்னும் சென்றடையவில்லை. அரசிற்கு எவ்வளவு நிதி கிடைத்தது? எவ்வாறு செலவிடப்படுகிறது? - என்பதில் வெளிப்படைத்தன்மை கிடையாது. அரசின் தனியார் மயமாக்கல் செயற்பாட்டை நாம் முழுமையாக எதிர்க்கிறோம். நாட்டின் தேசிய வளங்கள் தாரைவார்க்கப்படுகின்றன இதை அனுமதிக்க முடியாது. - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(க-3)

## அகதிப் பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5ஆம் திகதி சனியன்று இடம்பெற்றிருந்தது. அடுத்த நாள் ஞாயிறன்று இவ்விடயம் நீதிவானிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனையடுத்து இதுகுறித்து பூரண விசாரணை நடத்துமாறு மன்னார் நீதிவான் எம்.என்.எம்.அப்துல் லாஹ் பொலீஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

பொலீஸார் சமர்ப்பித்த அறிக்கையின் பின்னரே கடற்படையினரை அடையாள அணிவகுப்பில் நிறுத்துவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மணல்திட்டில் நிர்க்கதியாகி நின்ற தம்மை இச்சம்பவத்தின் பின்னர் கடற்படையினர் அழைத்துவந்து ஊர்முனை கடற்படைமுகாமில் சோதனையிட்டனர் என்றும் -

தன்னை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியவர்களுள் ஒருவரை அச்சமயம் அந்த முகாமில் தாம் கண்டார் என்றும் -

பாதிக்கப்பட்ட பெண் பொலீஸாருக்குத் தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. (க-8)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாளிகைக்கு அழைத்து அவர்களுடன் நீண்ட நேரம் ஜனாதிபதி சந்திரிகா பேச்சு நடத்தியுள்ளார்.

அமைதி முயற்சிகளை முன்னெடுக்கவும், அரசமைப்பை மாற்றுவதற்கும் தாம் தீர்மானித்துள்ளார் எனவும், இந்த முயற்சிகளின்போது ஜே.வி.பியின் ஆட்சேபனையைத் தாம் கவனத்தில் கொள்ளவேபோவதில்லை எனவும் ஜனாதிபதி அப்போது கூறியுள்ளார் எனத் தெரிகிறது. தமது இந்த நடவடிக்கைக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை ஒன்று திரட்டிவருமாறும் சம்பந்தப்பட்ட இருவரிடமும் ஜனாதிபதி கோரினார் என ஜனாதிபதி மாளிகைத் தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் அந்த இருஉறுப்பினர்களும் தற்போது மிக சூட்சுமமான முறையில் கட்சி அதிருப்தியாளர்களை ஒன்று திரட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள் என ஐ.தே.க. வட்டாரங்களிலிருந்துதெரியவருகின்றது.

(க-3)

## படையினர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடு செய்யப்பட்ட இப்பேரணி முற்பகல் 10.30 மணியளவில் நல்லூர் ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமாகியது. பேரணி கோயில் வீதியூடாகப் போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தைச் சென்றடைந்து அங்கு போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத் தலைவர் றொனி பேர்சனிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

வலி.கிழக்கு பொது அமைப்புக்களின் சார்பில் நீர்வேலி தெற்கு திலீபன் சனசமூக நிலையப் பிரதிநிதி சிங்கரட்ணம் செல்வராணி, கோப்பாய்ப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களின் இணைப்பாளர் பவளகேசரி மகிழினி ஆகியோர் மகஜர்களைக் கையளித்தனர்.

பேரணியில் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர்கள்,பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் பேரணியில் பங்கேற்று அரசுக்கும் படையினருக்கும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

பேரணியில் கலந்துகொண்ட அனைவரும் பல்வேறுபட்ட வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளைக் கையில் ஏந்தியிருந்தனர். ஊர்வலம் சென்று கொண்டிருக்கும்போது பேரணியில் சென்ற அனைவரும் அரசுக்கும் படையினருக்கும் எதிரான கோஷங்களை உரத்து எழுப்பினர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டதும் பேரணியில் சென்றோர் கோயில் வீதியில் உள்ள கைலாய பிள்ளையார் கோயில் வரை நகர்ந்து சென்று அங்கு ஒன்று கூடினர். அவர்கள் மத்தியில் எம்.பிக்கள் உரையாற்றினர். பின்னர் அனைவரும் கலை[illegible] சென்றனர்.

(8-7-12-15-86-88-17)


### முதலாம் ஆண்டு நினைவு அலைகள்



**அமரர் கந்தையா சச்சிதானந்தம்**

(திதி: பஞ்சமி 15.03.2005)

நெஞ்சம் மகிழ 27.08.1940 | நெஞ்சம் கலங்க 26.03.2004

ஆனதுவோ பன்னிருமாதம்
ஆறுமோ எம் நெஞ்சம்?
பன்னிரு ஆண்டானாலும் - நாம்
என்றும் உங்களை மறவோம்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

திருமதி சச்சிதானந்தம்,
வராத்துப்பளை,
பருத்தித்துறை. (43130)(29-14-17)

தாய், மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



### மரண அறிவித்தல்கள்

**சின்னமணி பாக்கியநாதன்**

மீசாலை, மந்துவிலைப் பிறப்பிடமாகவும் கோப்பாய், பூதர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னமணி பாக்கியநாதன் (ரவி - கற்பகப் பணியாளர்) 13.03.2005 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் வடக்கு,*
*பூதர்மடம்.* (43132)(29-14-17)

தகவல்:
பா.சுஜீவன் (மகன்).

**திருமதி கனகம்மா கதிரேசு**

27, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் தற்போது D 2, 11 வேலவனராம தொடர்மாடி, கொழும்பு - 6, இல் வசித்தவருமாகிய திருமதி கனகம்மா கதிரேசு 12.03.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற க.கதிரேசு (OIC prission) அவர்களின் மனைவியும் க.குமரேசன், திருமதி உமாராணி பாலகிருஷ்ணன் (புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சு - வன்னி), க.சிவனேசன், கலாராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி இந்திராணி குமரேசன், கு.பாலகிருஷ்ணன் (புனர்வாழ்வு அமைச்சு, திருகோணமலை), சிறீ சிவானி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2005) செவ்வாய்க்கிழமை மகிந்த மலர்ச்சாலை, கல்கிசையில் நடைபெற்று, பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*D 2 11 வேலவனராம*
*தொடர்மாடி, கொழும்பு-6.* (43127)(29-14-17)

தகவல்:
கு.பாலகிருஷ்ணன்
(மருமகன்).



**NIRU**
KONDAVIL
A/L 2007
CHEMISTRY
ஆரம்பம்:
17.03.2005
வியாழன் 4.30
திரு.N.மகேஸ்வரன்
(41522)(29-14-17)



**BRIGHTMAN**
நாவலர் வீதி, யாழ்நகர்
A/L 2007
CHEMISTRY
பொது இரசாயனம்
By: DIAS
(B.Sc. Hons (Che/Sp)
ஆரம்பம்:
17.03.2005
Thus. 4.00 p.m.
(43096)(29-14-17)



*சொற்ப பிரதிகளே உள்ளன*

சகல போட்டிப் பரீட்சைகளுக்குமான
**நுண்ணறிவு வழிகாட்டி நூல்**
I.Q. For All
ஆக்கம்: P. உமாசங்கர்

கிடைக்குமிடங்கள்:

1) பூபாலசிங்கம் புத்தகசாலை
2) சிறீலங்கா புத்தகசாலை
3) ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
4) துர்க்கா புத்தகசாலை
5) சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை

(43101)(29-14-17)



### மரண அறிவித்தல்கள்

**பொன்னம்பலம் சரவணபவன்**

(திருநெல்வேலி ஞானவைரவர் ஆலய தர்மகர்த்தா)

பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சரவணபவன் நேற்று (14.03.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பலாலி வீதி,*
*திருநெல்வேலி வடக்கு,*
*திருநெல்வேலி.* (43135)(29-14-17)

தகவல்:
க.ஆனந்த நடேசன்
(மருமகன் -ஒஸ்ரின் ஏஜென்சி)

**கந்தையா செல்லத்துரை**

(ஓய்வுபெற்ற C.T.B. பரிசோதகர்)

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் பொன் கந்தையா வீதி, நெல்லியடியையும் சிவிக்ஸ் சென்ரர் வட்டக்கச்சியையும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா செல்லத்துரை 13.03.2005 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தெய்வானை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் செல்வரதி (கனடா), பவானி (கனடா), சிவநேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவிச்சந்திரன் (கனடா), சிவசுப்பிரமணியம் (கனடா), கேதீஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அனித்தா, கார்த்திக், பவிதா, பிரணவி, ராகவி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற கந்தப்பு (ஆசிரியர்), சிவபாக்கியம், பொன்னாச்சி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசம்மாவின் (ஆசிரியை) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.03.2005 கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மகாத்மா வீதி,*
*நெல்லியடி, கரவெட்டி.* (சி-41495)(29-14-17)

தகவல்:
க.கனகரத்தினம்
(மருமகன்)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.